2017 மே 23
செவ்வாய்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ஷஃபான் பிறை 26 | பக்கங்கள் 12 | மணி 03 | ஒளி 077

NAVAMANI DAILY
නවමණි දිනපතා
QD / 154 / NEWS / 2017

# நவமணி



04

## இலங்கையில் இரட்டை பிரஜாவுரிமை பிரஜைகளுக்கு உள்ள உரிமைகளும் சலுகைகளும்



## எக்ஸலன்ஸியின் துயரம்

10



12

## இலங்கையை வென்று வரலாறு படைத்தது ஸ்கொட்லாந்து

# சட்டத்தை மீறினால் கடும் நடவடிக்கை

## மஹரகம நகரில் முஸ்லிம் கடைக்கு தீ



மஹரகம நகரில் அமைந்துள்ள முஸ்லிம் வர்த்தகரொருவருக்குச் சொந்தமான வர்த்தக நிலையம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் நேற்று அதிகாலை 4 மணியளவில் நடைபெற்றுள்ளதோடு, தீயணைப்புப் படையினர் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

11 »»»»

## அம்பாறை முஸ்லிம் கடைக்கு இனவாதிகளால் தீ

அம்பாறை கச்சேரிக்கு முன்னாலுள்ள இறக்காமம் பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான உணவகத்துக்கு நேற்று அதிகாலை 2மணியளவில் இனந்தெரியாதவர்கள் தீ வைத்துள்ளனர்.

தீயினால் கடைக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், பொதுமக்கள் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் தீ

11 »»»»



## அரசாங்கம் எச்சரிக்கை

### முஸ்லிம் அமைச்சர்கள் சாகலவுடன் சந்திப்பு



நாட்டில் சட்டமும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு அரசு சகல நடவடிக்கைகளையும் எடுக்கும் என்றும் சட்டத்தை மீறுவோர் எவராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயங்காது எனவும் சட்டமும் ஒழுங்கும் அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்பின் பேரில்

11 »»»»

## பள்ளிவாசல் தாக்குதலுக்கு பிரிட்டனும் கண்டனம்

நாட்டிலுள்ள பள்ளிவாசல்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களுக்கு பிரித்தானியா அதன் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

குருநாகல், மல்லவபிட்டிய ஜும்ஆ பள்ளிவாசல் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பெற்றோல் குண்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட நிலையில் இந்த கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கைக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகர் ஜேமஸ் டயூரிஸ்,

11 »»»»

## 'ரிவிர' வுக்கு சீல்

கொழும்பு - புஞ்சி பொரளையில் அமைந்துள்ள அமைந்துள்ள ரிவிர பத்திரிகை அலுவலகத்திற்கு நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் நேற்று

11 »»»»

## புதிய எதிர்பார்ப்புக்களுடன் நாட்டை முன்னேற்றவே அமைச்சரவையில் மாற்றம்

ஜனாதிபதி

புதிய எதிர்பார்ப்புக்களுடன் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காகவே அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்தினேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இதற்காக, புதிதாக பதவிப்பிரமாணம்

11 »»»»



## ஜனாதிபதி மைத்திரி ஆஸி. பயணம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு அவுஸ்திரேலியா சென்றார்.

அவுஸ்திரேலிய பிரதமர் மெல்கம் டர்ன்புல்லின் அழைப்பினை ஏற்றுக்கொண்டே இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

அத்தோடு, இலங்கையின் அரச

11 »»»»

## அமைச்சுக்களில் அதிரடி மாற்றம்

### ஊடகம், நிதி மங்கள – வெளிவிவகாரம் ரவி

■ அ. அருண் பிரசாந்த்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றைய தினம் நல்லாட்சி அரசின் முதலாவது அமைச்சரவை மாற்றம் இடம்பெற்றது. இதில் 9 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களும் ஒரு

11 »»»»

## ரவி, மங்கள சமரவீர வியாழனன்று பதவியேற்பு

புதிய நிதி, ஊடக அமைச்சர் மங்கள சமரவீரவும், புதிய வெளிவிவகார அமைச்சர் ரவி

11 »»»»



## அமைச்சரவையல்ல அரசே மாற வேண்டும்

### கெஹலிய ரம்புக்வெல



■ அ. அருண் பிரசாந்த்

நாட்டின் தற்போதைய நிலைமையைப் பொறுத்தவரை அமைச்சரவை மாற்றமன்றி அரசின் மாற்றமே அத்தியாவசியமாகக் கருதப்படுகின்றது என்று ஒருங்கிணைந்த எதிரணி பாராளுமன்ற உறுப்பினரான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஆகவே, அரசு

11 »»»»

## வாசு தேவ நாணயக்கார ஆஸ்பத்திரியில் அனுமதி



பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார திடீர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சமீப காலமாக சளி மற்றும் ஆஸ்துமா பிரச்சினை காரணமாக சிகிச்சை பெற்று வந்த அவர், திடீரென ஏற்பட்ட மாரடைப்பினால் இவ்வாறு வைத்தியசாலைக்கு

11 »»»»

## இன விரோத செயற்பாடுகள் பாராளுமன்றில் இன்று விவாதம்

■ அ. அருண் பிரசாந்த்

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட எம்.பியான முஜிபுர் ரஹ்மானினால் பாராளுமன்றில் இன்றைய தினம் நாட்டில் இடம்பெற்றுவரும் இனக்குரோத செயற்பாடுகள் தொடர்பிலான சபை ஒத்திவைப்பு வேளை விவாதப் பிரேரணையொன்று கொண்டுவரப்படவுள்ளது.

இன்று மதியம் 1 மணிக்கு சபை கூடியதைத்

11 »»»»

நவமணி



# உலகையே கண் திறக்க வைத்த முஸ்லிம்கள் ஊடகங்களால் ஓரங்கட்டப்பட்டுள்ளனர்

## அஷ்ஷெய்க் எஸ்.எல். நௌபர் மௌலவி



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

உண்மையில் ஊடகத்துக்கு அடித்தளம் கொடுத்த மார்க்கம் இஸ்லாம். ஊடகம் எப்படி அமைய வேண்டும் என்று சொல்லிக் கொடுத்த மார்க்கம் இஸ்லாம். ஊடகத்தின் விதிமுறைகளைச் சொல்லிக் கொடுத்த மார்க்கம் இஸ்லாம். வேறு எந்த ஒரு மார்க்கத்துக்கும் உரிமை கொண்டாட முடியாத அளவுக்கு இஸ்லாத்துக்கும் ஊடகத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என பயிற்சிக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச கலாசார நிலையத்தின் பணிப்பாளரான நௌபர் மௌலவி தெரிவித்தார்.

சியன ஊடக வட்டம், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்துடன் இணைந்து நடாத்திய 'மாற்றத்தை நோக்கிய ஊடகப்பயணம்' என்ற தொனிப்பொருளிலான ஊடகக் கருத்தரங்கு கடந்த 20ஆம் திகதி சனிக் கிழமை கஹட்டோவிட்ட அல் - பத்ரியா மகாவித்தியாலத்தில் நடைபெற்ற போது அதில் உரையாற்றிய மௌலவி நவ்பர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சியன ஊடக வட்டத் தலைவரும் வானொலி முஸ்லிம் சேவை முன்னாள் பணிப்பாளருமான எம்.இஸட். அஹ்மத் முனவ்வரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அவர் மேலும் அங்கு உரையாற்றும் போது,

ஊடகம் இன்று உலகை ஆட்சி செய்து கொண்டிருக்கின்றது. எந்தவொரு நாட்டின் தலைவரை, அரசாங்கத்தை தெரிவு செய்வதாக இருந்தாலும் அதன் முக்கியமான ஒரு பகுதி ஊடகமாக இருக்கின்றது. உலகத்தில் என்னென்ன மாற்றங்களைச் செய்ய வேண்டுமோ அவற்றை இந்த ஊடகங்கள் செய்து கொண்டிருக்கின்றன.

அறியாமையிலிருந்த ஜாஹிலிய்யா கால உலகத்துக்கு ஊடகத்தைக் காட்டி கண் திறக்க வைத்த சமூகம் எம் முஸ்லிம் சமூகம். ஆனால் இன்று அதே ஊடகத்தின் மூலம் நாம் ஒதுக்கப்பட்டு, ஓரங்கட்டப்பட்டு இருக்கின்றோம்.

உண்மையைத் தெளிவாக முன்வைக் கும் போது சவால்களை எதிர் நோக்கியே ஆக வேண்டும் என்பதற்கு உதாரணமாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய முதலாவது செய்தியை எதிர்த்தவர் நபிகளாரின் குடும்பத்தைச் சேர்ந்த தனது சாச்சா அபூதாலிப் என்ற சோக உணர்வோடு நபிகளார் இருந்தவேளை, ஊடகத்துக்கே முன்மாதிரியாகத் திகழும் ஜிப்ரில்(அலை) அவர்கள் 'உனக்கு சவால்கள் வரலாம். ஆனால் உன்னோடு இறைவன் இருக்கின்றான்' என்ற செய்தியைக் கொண்டு வந்தார்கள். இவ்வாறு இறைவனிடம் இருந்து கொண்டுவரும் செய்திகளை மக்களுக்குச் சொல்வதற்காக இந்தப் ஊடகப்பணி பயன்படுத்தப்பட்டது.

அன்று நபிகள் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு செய்தியைச் சொல்லுவதற்கும் செய்தியைச் சேகரிப்ப தற்கும் நபிகளாருடன் தொடர்பாடல் வைத்துக் கொள்வதற்கும் ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொருவரை அனுப்பினார் கள் என்றால் அன்றைய தூர நோக்கும் சிந்தனையும் எப்படி அமைந்திருந்தது என்பதனைப் பாருங்கள்.

மதீனாவின் ஊடகத்துறை நபிகளார் அங்கு சென்ற போது வித்தியாசமான, விசாலமான முறையில் அதனை கையாண்டார்கள்.

அங்கு மஸ்ஜிதை அமைத்து அதனை ஒன்று கூடும் இடமாக மாற்றினார்கள். ஒரு நாளைக்கு ஐந்து முறை ஒவ்வொரு ஊரினதும் ஆண்கள் வயது வந்தவர்கள் ஓர் இடத்திலே ஒன்று சேர்வதற்காக ஐந்து நேரத் தொழுகை கடமையாக்கப்பட்டது.

அந்தத் தொழுகையை மாத்திரம் இன்றைய முஸ்லிம்கள் சரியாக ஊடக சிந்தனையோடு சிந்திப்பார்களாக இருந்தால் ஐந்து நேரத் தொழுகைக்கு பிறகு முஸ்லிம் சமூகத்துக்கு உன்னதமான செய்திகளைச் சொல்ல முடியும் என்பதனையும் நாங்கள் இன்று மறந்து விட்டோம்.

எங்களுடைய மஸ்ஜிதுகளின் தரம் உயர்த்தப்பட வேண்டும். ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும் ஏதோ ஒரு செய்தியைச் சுமந்து செல்லும் ஓர் உயர்ந்த மத்திய நிலையமாக மஸ்ஜிதுகள் (பள்ளிவாசல்கள்) மாற வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும் சஹாபாக்களுக்கு இறங்கப்பட்ட குர்ஆன் வசனங்களைத் தெளிவுபடுத்தி, அதற்குரிய நடவடிக் கைகளை எடுத்துச் சொன்னார்கள். யூதர்கள், சிலைவணங்கிகள், முனாபிக்குகள் விடயத்தில் நாங்கள் நிதானமாக நடந்து கொள்ள வேண்டும் என்று ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும் அன்று ஆலோசனை வழங்கினார்கள். எனவே ஐந்து நேரத் தொழுகை எமக்கு உன்னதமான ஒரு சந்தர்ப்பமாகும்.

ஓர் ஊரின் சிந்தனையாளர்கள், பொறுப்புவாய்ந்தவர்கள், உயர் மட்டத்தினர், குடும்பத்தலைவர்கள், படித்தவர்க்கத்தினர், வாலிபக் கூட்டத்தினர் , உலமாக் கூட்டத்தினர் ஒரு நாளைக்கு ஐந்து தடவை ஒன்று சேர்கின்றார்கள் என்றால் எங்களுக்கு எத்தனை திட்ட மிடல்களைச் செய்ய முடியும். இதனை நபி (ஸல்) அவர்கள் அன்று மதீனாவிலே நடத்திக் காட்டினார்கள். அதற்குப் பிறகு வெள்ளிக்கிழமை வந்தால் மிம்பர் அமைத்து, மேடை அமைத்து உபதேசம் புரிந்து தமது ஊடகத்தை ஒரு கிராமத்துக்கு மாத்திரமல்ல, அந்தப் பகுதிக்கே விரிவடையச் செய்தார்கள். இந்த உன்னதமான வழிமுறையை வேறு எந்த ஒரு மார்க்கத்திலும் காண முடியாது. அந்த அளவுக்கு ஊடகத்தைப் பயன்படுத்தி இருக்கிறது எமது மார்க்கம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா மீடியா போரத்தின் தலைவரும் நவமணிப் பத்திரிகை ஆசிரியருமான, என்.எம். அமீன், எங்கள் தேசம் ஆசிரியர், அஷ்ஷெய்க் ஜெம்ஸித் அஸீஸ், நொலேஜ் பொக்ஸ் பணிப்பாளர் எஸ். ஏ. அஸ்கர் கான், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப்பாளர் ஜுனைத் எம். ஹாரிஸ், தர்கா நகர் கல்வியியல் கல்லூரி முன்னாள் உப -பீடாதிபதி கலைவாதி கலீல், மீள்பார்வை ஆசிரியர் பியாஸ் முஹம்மத், ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போர பயிற்சி குழு இணைப்பாளர் ஹில்மி மொஹம்மட், டெய்லி சிலோன் செய்தி ஆசிரியர் அஷ்செய்க் எம். எம். முஹிதீன் ஆகியோர் கருத்தரங்கில் விரிவுரைகளை நடத்தினர்

கஹட்டோவிட்ட அல் - பத்ரியா, கஹட்டோவிட்ட பாலிகா, உடுகொட அரபா, திஹாரிய அல் - அஸ்ஹர், கள்-எலிய அலிகார், அல்லரமுல்ல ஸாஹிரா, நாம்புளுவ பாபுஸ்ஸலாம், குமாரிமுல்லை முஸ்லிம் மகாவித்தியாலயம் ஆகியவற்றின் உயர்தர மாணவ, மாணவிகள், பிரதேச அரபுக் கல்லூரி மாணவ, மாணவிகள் என 223 பேர் கருத்தரங்கில் கலந்து கொண்டு பயன்பெற்றனர். கலந்து கொண்ட மாணவர்கள் அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

விழாவில் மீடியா போரத்தின் பொதுச் செயலாளர் சாதிக் சிஹான், சியன ஊடக வட்ட உப - தலைவரும் நவமணி செய்தி ஆசிரியருமான ஸிராஜ் எம். சாஜஹான், சியன மீடியா சேர்க்கில் உப - செயலாளரும் இலங்கை வானொலி செய்தி ஆசிரியருமான பஸ்ஹான் நவாஸ், நவமணி ஆசிரியர் பீட உறுப்பினர் ஊடகவியலாளர் எம்.எஸ்.எம். ஸாகிர், ஸ்ரீலங்கா மீடியா போர செயற்குழு உறுப்பினர்கள், சியன மீடியா சேர்க்கில் நிர்வாகிகள், மாணவர்கள் பெற்றோர்கள், கல்விமான்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

விழா நிகழ்ச்சிகளை பாஸித் தொகுத்து வழங்கினார்.

# ரமழானை முன்னிட்டு வெலிகமவில் நிகழ்வுகள்

(வெலிகம நிருபர்)

புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு, வெலிகம பகுதியிலுள்ள பள்ளி வாசல் களில் விஷேட பயான் நிகழ்ச்சிகள் ஏற்பாடாகி வருகின்றன.

ஆண்கள், பெண்களுக்கு வெவ்வே றாக இந்த பயான் நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. வெலிகம முஹியத்தீன் பெரிய பள்ளிவாசல், பதுர் பள்ளிவாசல், கோட்டகொடை உமர் மிஹ்லார் பள்ளிவாசல், கொலேதண்ட ஜும்ஆப்பள்ளிவாசல், வெலிப்பிட்டிய ஜும்ஆப்பள்ளிவாசல், கப்புவத்தை ஜும்ஆப்பள்ளிவாசல் ஆகியவற்றில் இரவு இஷாத் தொழுகையைத் தொடர்ந்து பயான் நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

பெண்களுக்கான பயான் நிகழ்ச்சிகளை வெலிகம ஸலாஹிய்யா அரபுக்கல்லூரி, ஹின்ரியா அரபுக் கல்லூரிகளில் அஸர் தொழுகையைத் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.

புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு இவ்வாறான பயான் நிகழ்ச்சிகள் இப் பகுதியில் சுமார் 50 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# அம்பாறை மாவட்டத் தலைவராகத் தெரிவு



அம்பாறை மாவட்ட அரசசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் நடப்பு ஆண்டுக்கான தலைவராக அக்கரைப்பற்று ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் நிர்வாக குழுவின் உப தலைவரான பள்ளிக்குடியிருப்பைச் சேர்ந்த கலாநிதி ஐ.எல்.ஏ. ஹக்கீம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அம்பாறை மாவட்டத்தின் 20 பிரதேசக்கிளைகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட மேற்படி நிதியத்தின் 16 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் அம்பாறை நகர மண்டபத்தில் நடைபெற்றபோதே இவர் தலைவராகத்தெரிவு செய்யப்பட்டார்.

பள்ளிக்குடியிருப்பு பிரதேசத்தின் முதலாவது பொலிஸ் உத்தியோகத்தரான இவர் பிரதேசசபையின் உதவி தவிசாளராகவும் பணிசெய்துள்ளார். சாமஸ்ரீ, தேசமான்ய ஆதியாம் கௌரவ பட்டங்களைப் பெற்றுள்ள இவர் மெட்ரோ விவசாய அமைப்பின் தலைவராகவும் பதவிவகிக்கின்றார். இவர் ஓர் அகில இலங்கை சமாதான நீதிபதியுமாவார்.

# கிழக்கு மாகாண சபையில் உதுமாலெப்பையின் 3 பிரேரணைகள்

(பொத்துவில் மேலதிக நிருபர்)

கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் எம்.எஸ். உதுமாலெப்பை நாளை செவ் வாய்க்கிழமை நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபை அமர்வில் மூன்று தனிநபர் பிரேரணைகளை சமர்ப்பித்து உரையாற்றவுள்ளார்.

கிழக்கு மாகாண சபையின் 77ஆவது சபை அமர்வு இன்று (23) காலை 9.30மணிக்கு சபை தவிசாளர் தலைமையில் நடைபெறவுள்ளது. இதேவேளை கிழக்கு மாகாண எதிர்க்கட்சித்தலைவர் உதுமாலெப்பை மூன்று முக்கிய பிரேரணைகளை சமர்ப்பித்து உரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மூதூர் தள வைத்தியசாலையை ட தரத்திலிருந்து யு தரத்திற்கு தரமுயர்த்துவத்திற்கு கிழக்கு மாகாண அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை அமுல்படுத்தக் கோரி தனிநபர் பிரேரணை ஒன்றினையும், அட்டாளைச்சேனை அல் - அர்ஹம் வித்தியாலய மாணவர்களின் கல்வி நலன் கருதி புதிய காணியினை கொள்வனவு செய்வதற்கான நிதியினை ஒதுக்குமாறு கோரி தனிநபர் பிரேரணை ஒன்றினை சமர்ப்பித்தும் உரையாற்றவுள்ளார்.

அத்துடன், கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் கணக்கு நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள திதி உதவியாளர்களை பதில் கணக்காளர்களாக அல்லது உள்ளூராட்சி மன்ற கணக்காளர்களாக நியமிப்பதற்கு கோரும் தனிநபர் பிரேரணை ஒன்றினையும் சமர்ப்பித்து உரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# நான்காவது வருடமாகவும் செயலாளராகத் தெரிவு



அம்பாறை மாவட்ட அரசசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் செயலாளராக 4 ஆவது தடவையாகவும் நிந்தவூரைச்சேர்ந்த கலாபூஷணம் ஏ.எல். முஹம்மது அமீன் நிதியத்தின் 16 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டார்.

அம்பாறை நகர மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் அம்பாறை மாவட்டத்தின் பிரதேச செயலகங்களின் சகல பிரிவுச் சங்க நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

நிந்தவூர் வடக்கு ஆண்கள் பாட சாலை அல்அஸ்றக் தேசிய பாடசாலை என்பவற்றின் பழைய மாணவரான இவர் ஆசிரியராக, அதிபராக, ஆசிரிய ஆலோசகராக, கொத்தணி அதிபராக, உதவிக் கல்விப் பணிப்பாளராக, கோட்டக் கல்விப்பணிப்பாளராக 40 ஆண்டுகள் கல்விப்பணி ஆற்றியுள்ளார். பொதுச்சேவையில் மிகுந்த ஈடுபாடுகொண்ட இவர் காதி நீதிபதியாகவும் நிந்தவூர் ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை யின் செயலாளராகவும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குனர் சபை உறுப்பினராகவும் பணியாற்றி யுள்ளதுடன் தற்போது நிந்தவூர் 17ஆம் பிரிவு கிராம முன்னேற்றச் சங்கத்தின் தலைவராகவும் பணிபுரின்றார். அகில இலங்கை சமாதான நீதிபதியான இவர் நிந்தவூர் பிரதேச ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் செயலாளராக 4 வருடங்கள் கடமை புரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் 27 வருடத்திற்கு பின்னர் ஐதுரூஸ் மகாம் பள்ளிவாசல் திறக்கப்பட்டது. யுத்தத்தினால் கடுமையாக பாதிக்கப்பட்ட குறித்த பள்ளிவாசலை யாழ் முஸ்லீம் மக்கள் இணைந்து மேற்கொண்ட புனரமைப்பின் பின்னர் நேற்றுமுன்தினம் (21) திறந்து வைக்கப்பட்டது.இதன் போது யாழ் கிளிநொச்சி உலமா கிளை சபை தலைவர் சுபியான் மௌலவி உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

(யாழ். பாறுக் ஷிஹான்)





# பேர்ஹம் தோட்ட தொழிலாளர்கள் நிர்வாகத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



(ஹட்டன், கிஷாந்தன்)

தோட்டங்கள் காடாகி காட்சியளிக் கின்றது. தொழிற்சாலையும் மூடப்பட் டுள்ளது. குடிநீருக்கும், சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிக்கும் தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுப்பதில்லை. இவ்வாறான பல்வேறு குறைபாடுகளை முன்வைத்து தலவாக்கலை பேர்ஹாம் தோட்ட தொழிலாளர்கள் அத்தோட்டத்தின் நிர்வாகத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

20.052017 அன்று இந்த ஆர்ப்பாட்டம் பேர்ஹாம் தோட்டத்தின் மூடப்பட்டிருக்கும் தொழிற்சாலைக்கு முன்பாக இடம்பெற்றது. இதில் அத்தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 200ற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் தொழிலாளர்கள் அத்தோட்ட நிர்வாகத்தினால் கவனிக்கப்படாத பல்வேறு விடயங்களை வாசகங்கள் எழுதிய பதாதைகள் ஊடாக வெளிகொண்டு வந்து கோஷங்களை எழுப்பி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தோட்டத்தின் தேயிலை தொழிற்ச ாலை மூடப்பட்டிருப்பதால் வேறு தோட்டங்களுக்கு அங்கு பறிக்கப்படுகின்ற தேயிலை கொழுந்து கொண்டு செல்லப்படுவதனால் தொழிலாளர்களுக்கு தொழில் மற்றும் ஏனைய தொழிற்சாலை ஊடாக கிடைக்கும் சலுகைகள் மறுக்கப்பட்டு வருவதாக தொழிலாளர்கள் சுட்டிக்காட்டினர்.

## வாசகர் கடிதம்

# கீழிறங்கியுள்ள வத்துகாமம் பிரதான பாதையை சீர் செய்யுமாறு பொது மக்கள் வேண்டுகோள்



(வத்துகாமம் நிருபர்)

மடவளை - வத்துகாமம் பிரதான பாதையில் மதீனா மத்திய கல்லூரி மைதானத்திற்கு அருகிலுள்ள பஸ்தரிப்பிடத்திற்கு அண்மித்த பகுதி கீழ் இறங்கி ஆபத்தான நிலையில் உள்ளது. இதனை அபிவிருத்தி செய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பொது மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

**பிரதி செவ்வாய்க்கிழமை நாட்களிலும் வாசகர் கடிதம் பிரசுரமாகும். உங்கள் பிரச்சினைகளை சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதி அனுப்பவும்.**
**வாசகர் கடிதம்**
**நவமணி**
**156, ஆஸ்பத்திரி வீதி,**
**தெஹிவளை.**

## பதில் பொலிஸ் மா அதிபராக சி.டி.விக்கிரமரத்ன



பொலிஸ்மா அதிபதி பூஜித் ஜெயசுந்தர ஐந்து நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்றைய தினம் ரஷ்யா பயணமானதால் பதில் பொலிஸ் மா அதிபராக சீ.டி.விக்ரமரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கமைவாக நேற்று முதல் எதிர்வரும் 26ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் பதில் பொலிஸ்மா அதிபராக பிரதிபொலிஸ்மா அதிபராக (நிர்வாகம்) சி.டி.விக்கிரமரட்ன பணியாற்றுவார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரியந்த ஜயகொடி தெரிவித்தார்.

### பிலியந்தலை துப்பாக்கிச் சூடு;

## மூவருக்கு ஜூன் 5 வரை விளக்கமறியல்

பிலியந்தலையில் போதைப்பொருள் வர்த்தகர்களுக்கிடையில் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள 3 சந்தேகநபர்களும் எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

படுகொலை செய்வதற்காக தூண்டிவிடப்பட்டமை, சாட்சியங்களை காணாமலாக்கியமை, தவறான தகவல்களை வழங்கியமை மற்றும் சந்தேகநபர்களுக்கு பாதுகாப்பு வழங்கியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களில் தனுசா தமயந்தி என்ற பெண்ணொருவர் உட்பட இசுரு இசான் மற்றும் தரிந்து மதுசங்க ஆகிய இரு ஆண்களும் நேற்று முன்தினம் அஹங்கம பிரதேசத்தில் வைத்து கைதுசெய்ததாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

அந்தவகையில், பிலியந்தலை பிரதேசத்தில் போதைப்பொருள் வர்த்தக சுற்றிவளைப்பில் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரி உட்பட குழந்தையொன்று துப்பாக்கிச் சூட்டில் பலியாகியுள்ளதோடு, மேலும், இரண்டு பொலிஸ் அதிகாரிகளும் நபரொருவரும் கடுகாயங்களுக்குள்ளாகியமை குறிப்பிடத்தக்கது.

# இனவாத செயற்பாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குக



நாட்டில் மீண்டும் தலைதூக்கியுள்ள இனவாத செயற்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் நிலையில் இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் நேற்றைய தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே பின்வருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நாட்டில் ஏற்பட்டுள்ள இனவாத சூழல் முஸ்லிம்கள் மத்தியில் மிகவும் பதற்றமான நிலையை ஏற்படுத்தியுள்ளது. ரமழான் மாதம் நெருங்கும் வேளையில் இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளமையானது முஸ்லிம்களது மத அனுஷ்டான விடயங்களுக்கு மிகவும் பாதிப்பாக அமையும்.

எனவே, இனவாத செயற்பாடுகளை கட்டுப்படுத்த நல்லாட்சி அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விடயத்தில் நல்லாட்சி அரசுக்கு விசேட பொறுப்புள்ளது.

தமது மத அனுஷ்டானங்களை நிம்மதியாகவும், அமைதியாகவும் முன்னெடுக்க வேண்டும். அதற்கான சூழலை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே முஸ்லிம்கள் கடந்த தேர்தல்களில் தமது வாக்குகளைப் பயன்படுத்தினர். அதற்கமைய ஆட்சியில் அமர்த்தப்பட்ட நல்லாட்சி அரசு குறுகிய காலம் அதனை சரிவர நிறைவேற்றியது. எனினும், மீண்டும் இனவாத செயற்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இது முஸ்லிம்கள் மத்தியில் பலத்த ஏமாற்றத்தையும், அச்சத்தையும் உருவாக்கியுள்ளது. எனவே, இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தி இனவாத செயற்பாடுகளை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மஹிந்தானந்தவுக்கு பிணை



39 இலட்சம் ரூபா நிதி மோசடி உள்ளிட்ட மூன்று விடயங்கள் தொடர்பில் குற்றம்சாட்டப்பட்டுள்ள மஹிந்தானந்த அளுத்கமகே பிணையில் விடுவிக்கப்பட்டார்.

குறித்த வழக்கு நேற்றையதினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை, 20 இலட்சம் ரூபா சரீரப் பிணைகள் இரண்டில் அவரை விடுவித்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பத் விஜேரத்ன உத்தரவு பிறப்பித்தார்.

மேலும், மஹிந்தானந்தவின் கடவுச்சீட்டையும் நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனைகள் இருப்பின் அதனை ஜூன் 27ஆம் திகதிக்கு முன்னர் தெரிவிக்குமாறு நீதவான் அறிவித்துள்ளார்.

## 25 க்கு பின்னர் கடும் மழை

தென்மேற்கு பருவப்பெயர்ச்சி கால நிலை எதிர்வரும் நாட்களில் நாட்டின் ஊடாக சஞ்சரிக்கும் என்றும், எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் இவ்வாறான நிலை காணப்படுவதனால் நாட்டின் தென்மேற்கு பகுதியில் மழை மற்றும் காற்றின் வேகம் அதிகரிக்கும் என வானிலை அவதான நிலையம் தெரிவித்தது.

இதனிடையே மேல், சப்ரகமுவ, தென், மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் இடைக்கிடையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் பிற்பகல் 2 மணிக்கு பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என அந்த திணைக்களம் சுட்டிக்காட்டியது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் பலத்த மழை பெய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக வானிலை அவதானநிலையம் சுட்டிக்காட்டியது.

# சமூக நீதியை உறுதிப்படுத்த அரசு அர்ப்பணிப்புடன் உள்ளது

### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

மக்களுக்கு சமூக நீதியை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அர்ப்பணிப்புடன் உள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

கலகெதர புதிய நீதிமன்றக் கட்டிடத் தொகுதியை நேற்றையதினம் உத்தியோக பூர்வமாக திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

சமூக நீதி, மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள், மக்களின் சுதந்திரம், ஜனநாயகம் ஆகிய அம்சங்கள் குறித்து தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் பாரிய செயற்திட்டங்களை மேற்கொண்டுள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, அரசியலமைப்பின் 18வது திருத்தம் நீக்கப்பட்டமையும் 19வது திருத்தம் நிறைவேற்றப்பட்டமையும் இந்த நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் கிடைத்த பெரும் வெற்றியாகும் எனக் குறிப்பிட்டார்.

19வது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக தாபிக்கப்பட்ட ஆணைக்குழுக்களினூடாக நாட்டில் அனைத்து பிரஜைகளுக்கும் சட்டத்தின் நீதி, சமூக நீதி, சுதந்திரம், அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள் ஆகிய அனைத்திற்கும் பலமான ஓர் அடித்தளம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, இந்த சுயாதீன ஆணைக்குழுக்களின் நடவடிக்கைகளை மிகவும் முறையாகவும் வினைத்திறன்மிக்கதாகவும் நடைமுறைப்படுத்துவதற்கு அண்மையில் குறித்த அதிகாரிகளை அழைத்து ஆலோசனை வழங்கியுள்ளதாக தெரிவித்தார்.

பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து இலங்கை முழுமையாக சுதந்திரம் பெற்ற தினம் இன்றாகும் என்பதை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, 1972 மே மாதம் 22ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் மூலம் நீதித்துறை நாட்டில் முழுமையான சுதந்திரமும் ஜனநாயகபூர்வமானதாகவும் மாற்றப்பட்டது எனக் குறிப்பிட்டார்.

நீதிமன்ற கட்டிடத் தொகுதியை நிர்மாணிக்கும் திட்டத்தின் கீழ் இந்த நீதி மன்ற கட்டிடத் தொகுதி நீதி அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இரண்டு மாடிகளைக்கொண்ட இப்புதிய நீதிமன்ற கட்டிடத் தொகுதிக்கு 76 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

புதிய நீதிமன்ற கட்டிடத் தொகுதி நீதியரசர்களுக்கான உத்தியோகபூர்வ கூடம், ஆவண காப்பகம், சட்டத்தரணிகளுக்கான ஓய்வு அறைகள், குடும்ப ஆலோசனை அலுவலகம் போன்ற வசதிகளைக் கொண்டுள்ளது.

புதிய கட்டிடத் தொகுதியை திறந்து வைத்த ஜனாதிபதி, அதனை பார்வையிட்டதுடன், சட்டத்தரணிகள் சங்க அதிகாரிகளுக்கு சட்ட நூல்களையும் வழங்கி வைத்தார்.

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, அமைச்சர்களான லக்ஷ்மன் கிரியெல்ல, சரத் அமுனுகம, நவீன் திசாநாயக்க, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, பிரதி அமைச்சர் துஷ்மந்த மித்ரபால, பிரதம நீதியரசர் பிரியசாத் டெப், சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய ஆகியோரும் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர்.



நாட்டின் அமைதியை சீர்குலைக்கும் வகையில்; கடும்போக்குவாதிகளினால் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்பாடுகளுக்கு எதிராக விசேட துஆ பிரார்த்தனையொன்று நேற்றையதினம் காத்தான்குடி மத்ரஸதுல் பலாஹ் அரபுக் கலாசாலையில் மௌலவி அல்அமீன் பலாஹியினால் நிகழ்த்தப்பட்டது. இந்த விசேட துஆ பிரார்த்தனையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர். இதன்போது அமைச்சரினால் ஒரு தொகுதி கணனிகள் மத்ரஸாவுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டன.

# அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் போராட்டத்தில்






தொழிற்சங்க ஒடுக்குமுறையை உடனடியாக நிறுத்தவேண்டுமென அரசாங்கத்தை வலியுறுத்தி அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நேற்றையதினம் கொழும்பில் எதிர்ப்பினை தெரிவித்தது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் அநுருத்த பாதெனிய, செயலாளர் நவீக் த சொய்சா உள்ளிட்ட வைத்தியர்கள் மற்றும் வைத்திய கல்லூரிகளின் மாணவர்கள் சிலரும் கொழும்பு அளுத்கடை நீதிமன்ற கட்டடத்திற்கு அருகில் அமைதியான போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மேலும், அளுத்கடையிலிருந்து டெக்னிகல் சந்தி வரை மருதானை பாதையூடாக புஞ்சி பொரள்ளை தேசிய வைத்தியசாலையூடாக பேரணியொன்றையும் முன்னெடுத்தனர்.

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா நல்லாட்சி தொடர்பில் இன்று உரை

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு பங்களாதேஷ் தலைநகர் டாக்காவிற்கு சென்றுள்ள



தோடு, பங்களாதேஷிலுள்ள சர்வதேச மூலோபாய ஆய்வுகள் தொடர்பான நிறுவனத்தில் இன்றையதினம் உரையாற்றவுள்ளார்.

பிளவுபட்ட சமூகத்தினிடையே சமரசம், ஜனநாயகத்தை கட்டியெழுப்புதல் மற்றும் நல்லாட்சி என்பன தொடர்பில் இலங்கையிடமிருந்து பாடத்தை கற்றுக்கொள்ளல் என்ற தலைப்பில் இவர் இன்று செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணியளவில் உரையாற்றவுள்ளார்.

இந்த நிறுவனம் பங்களாதேஷ் அரசாங்கத்திற்கு சொந்தமான தேசிய ஆய்வு மற்றும் ஆய்வு நிறுவனங்கள் மூலமான விடயங்களை மேம்படுத்துதல் சர்வதேச விவகாரம் பாதுகாப்பு அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்களையும் முன்னெடுக்கின்றது.

## ஜூலையில் பஸ் கட்டணம் அதிகரிப்பு; தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம்

ஜூலை மாதம் முதலாம் திகதியிலிருந்து பஸ் கட்டணங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்தது.

அந்தவகையில், குறித்த பஸ் கட்டணமானது அதிகரிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, இயங்குகின்ற பஸ்களில் செலவுகள் குறித்தே இந்த பஸ் கட்டண அதிகரிப்பில் திருத்தங்கள் மேற்கொள்வது அவசியம் என்றும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

இதனடிப்படையில், ஆகக் குறைந்த கட்டணமான 9 ரூபாய், 10 ரூபா வரை அதிகரிக்கப்படவுள்ளது. மே மாதம் முடிவடையும் நிலையில், குறிப்பிட்ட கட்டண திருத்தங்கள் தொடர்பிலான தகவல்களை அறிந்துகொள்ளமுடியும் என்றும் அச்சங்கம் குறிப்பிட்டது.

# மேல் மாகாணசபையில் தனித்தியங்கும் பொது எதிரணி

(எம்.எஸ்.எம்.முன்தஸிர்)

மேல் மாகாணசபையின் ஆளும் தரப்பைச் சேர்ந்த பொது எதிரணி ஆதரவு மாகாணசபை உறுப்பினர்கள் தனிக்குழுவாகச் செயற்படவுள்ளது.

கடவத்தை சுமிதா வரவேற்பு மண்டபத்தில் கூடிய மேல் மாகாணசபையின் பொது எதிரணி ஆதரவு ஆளும்கட்சி மாகாணசபை உறுப்பினர்களினால் மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேல் மாகாணசபையில் பொது எதிரணிக்கு ஆதரவு தெரிவிக்கும் 41 உறுப்பினர்களில் 38 பேர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டதாக கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

ஆளும்கட்சி அல்லது எதிர்க்கட்சி எனச் செயற்படாமல் மாகாணசபையில் தனிக்குழுவொன்றாக இந்த அணி செயற்படவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மேல் மாகாணசபையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 56, ஐக்கிய தேசியக்கட்சி 28, ஜனநாயக கட்சி 9, மக்கள் விடுதலை முன்னணி 6, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 2, ஜனநாயக மக்கள் முன்னணி 2, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 1 என்ற நிலையில் கட்சிகளின் பிரதிநிதித்துவம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. மொத்த உறுப்பினர்களின் தொகை 104 ஆகும்.

இதேவேளை, மேல் மாகாணசபையின் மே மாத அமர்வு இன்று(23) மாகாணசபையின் தலைவர் சுனில் விஜேரத்ன தலைமையில் மாகாணசபையின் கேட்போர்கூடத்தில் இடம்பெறவுள்ளது. இக்கூட்டத்தில் பொது எதிரணி ஆதரவுக் குழுவின் தீர்மானங்கள் மாகாணசபையில் எதிரொலிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

NAVAMANI DAILY
நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

**FREELANKA MEDIA LTD.**
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com

23RD MAY 2017 - TUESDAY

# 21 முஸ்லிம் எம்.பிக்களும் அதிகாரமற்றவர்களா?

முஸ்லிம் அரசியல் தலைமைகளிடம் அமைச்சு பதவிகளும் அனைத்து சலுகைகளும் உள்ளபோது அதிகாரம் மாத்திரம் இல்லாதிருப்பதாக மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எஸ்.எப்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

கஹட்டோவிட்டவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் நடத்திய கருத்தரங்கில் பேசும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 21 முஸ்லிம் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அதில் முஸ்லிம் அமைச்சர்களுக்கான பாதுகாப்பு உட்பட ஏனைய சகல வசதிகளுமுள்ளன. ஆனால் இருக்க வேண்டிய அதிகாரத்தை மட்டும் இழந்திருக்கின்றோம் என்று அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களுக்கெதிராக நடக்கும் நிகழ்வுகளுக்கு எதிராக 21 முஸ்லிம் எம்.பிக்களும் ஒன்று சேர்ந்து குரல் கொடுத்தாலும் எதையும் சாதிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக நேற்று நள்ளிரவு வரை முஸ்லிம்களை இலக்காக வைத்து 18 சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. ஒன்று, இரண்டு, மூன்று என்று நாளாந்தம் பள்ளிவாசல்கள், வர்த்தக நிலையங்கள் தாக்கப்பட்டவண்ணமுள்ளன.

இத்தாக்குதல்களை நிறுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இதற்கு பிரதான காரணம் அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் கூறியிருப்பது போன்று முஸ்லிம் அரசியல் தலைமைகளிடம் அதிகாரம் இல்லாமையாகும்.

225 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்ட பாராளுமன்றத்தில் 21 முஸ்லிம் உறுப்பினர்கள் இருப்பது என்பது குறைத்து மதிப்பிடக்கூடியதல்ல. ஆனால் 21 பேருக்கும் போதிய அதிகாரமில்லாமையால் அவர்களது குரலுக்கு பதில் கிடைக்காதிருக்கின்றது.

அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் குறிப்பிட்டிருப்பது போன்று முஸ்லிம்கள் மத்தியிலே நிலவும் ஒற்றுமையின்மை காணப்படும் வரை இந்த அதிகாரத்தை முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பெறுவது கடினமானதே.

நடக்கும் சம்பவங்கள் பற்றி ஆராய்வதற்கு கடந்த வெள்ளியன்று முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் முஸ்லிம் விவகார அமைச்சர் அப்துல் ஹலிமின் ஏற்பாட்டில் ஒன்று கூடினர். உடனே ஜனாதிபதியையும், பிரதமரையும் சந்திப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டது.

ஆளும்கட்சியிலே 21 முஸ்லிம் உறுப்பினர்களிருந்தும் மூன்று நாட்களாக சந்திப்புக்கான நேரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் முஸ்லிம் எம்.பிக்கள் இருக்கிறார்கள். தொலைபேசி மூலம் பேசி நேரத்தை பெற வேண்டிய முஸ்லிம் எம்.பிக்கள், அமைச்சர்கள் 21 பேரும் கையொப்பம் திரட்டுவதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு காரணம் முஸ்லிம் எம்.பிக்கள் மத்தியில் அதிகாரம் இல்லாமையே.

முஸ்லிம் எம்.பிக்கள் அதிகாரத்தை எப்படி பெறுவது என்பது தொடர்பாகத் தீர சிந்திக்க வேண்டும். தேவை ஏற்படின் பதவிகளிலிருந்து விலகுவதற்கு கூட தயக்கம் காட்டக்கூடாது.

துணிச்சலான தீர்மானங்களை எடுக்காது இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியிலிருந்து மீளுவது கடினமானதே?




# இலங்கையில் இரட்டை பிரஜைகளுக்கு உள்ள உரிமைகளும் சலுகைகளும்

இலங்கை மற்றும் வேறு நாடுகளின் பிரஜாவுரிமை பெற்றிருக்கும் அல்லது இரட்டை பிரஜாவுரிமை பெற்றிருக்கும் பிரஜைகள் பற்றி இதுவரை இல்லாத அவதானம் நாட்டிலே ஈர்க்கப்பட்டுள்ளது. முழு நாடும் இரட்டை பிரஜாவுரிமை பற்றி பேச காரணம் காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்கவின் இரட்டை பிரஜாவுரிமை பற்றி நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்காகும்.

நல்லாட்சி அரசு பதவியேற்று முதன் முறையாக மேற்கொள்ளப்பட்ட அரசியல் அமைப்பு திருத்தமான **19**ஆவது அரசியல் யாப்பு திருத்தத்தின் மூலம் இரட்டை பிரஜாவுரிமை பெற்றிருக்கும் ஒருவருக்கு பாராளுமன்ற உறுப்பினராக போட்டியிட முடியாது. எனினும் சர்ச்சை ஏற்படுத்தியிருக்கும் கீதா குமாரசிங்க கடந்த பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டார். அப்போது தனக்கு இரட்டை பிரஜாவுரிமை இல்லை என்று அவர் தெரிவித்திருந்தார். அதன்படி அவர் காலி மாவட்டத்தின் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவானார்.

பாராளுமன்ற தேர்தலுக்கு பின் கீதாவுக்கு இரட்டை பிரஜாவுரிமை இருப்பதன் காரணமாக அவருக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவி வகிக்க முடியாது எனக் கூறி காலி மாவட்டத்தின் வாக்காளர்கள் சிலர் மேல்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர். அவர்களுடைய கோரிக்கை கீதாவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்து செய்ய வேண்டும் என்பதாகும். மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கு விசாரணையின் பின் கீதாவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்து செய்து தீர்ப்பு வழங்கப்பட்டது. எனினும் மேல் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக கீதா குமாரசிங்க அதன் தீர்ப்பை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்தார். தற்போது உயர்நீதிமன்றம் அந்த வழக்கினை விசாரணை செய்வதற்கு ஏற்றுக்கொண்டுள்ளது.

கீதாவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி இரத்து செய்யப்படுமா இல்லையா என்பதை உயர் நீதிமன்றமே முடிவு செய்ய வேண்டும். கீதாவுக்கு இரட்டை பிரஜாவுரிமை இருப்பது அரசியல் அரங்கில் பிரதான பேச்சு பொருளாக மாறியதோடு பாராளுமன்றத்தில் உள்ள மற்றும் பலருக்கு இரட்டை பிரஜாவுரிமை இருப்பதாகவும் கூறப்படுகிறது. இங்கே நாங்கள் இரட்டை பிரஜாவுரிமை மற்றும் இரட்டை பிரஜாவுரிமை கிடைக்கும் முறை பற்றி ஆராயவுள்ளோம். இரட்டை பிரஜாவுரிமை என்பது தான் பிறந்த இலங்கை நாட்டிலிருந்து மற்றொரு நாட்டினது பிரஜாவுரிமை பெறுவதாகும். இரட்டை பிரஜாவுரிமை பெறுவது பற்றி கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பிரதிபா மஹானாம ஹேவா கூறுவதன்படி பல முறைகளில் இரட்டை பிரஜாவுரிமையை பெறலாம் என்பதாகும். இலங்கையில் பிறந்த ஒருவர் பிறப்பிலே இலங்கை பிரஜையாகிறார். அத்தோடு இலங்கையிலிருந்து மற்றொரு நாட்டின் பிரஜாவுரிமையை பெறுவதற்கும் சட்டத்தின் மூலம் பிரஜாவுரிமை பெறுவதற்கு ஏற்பாடுகள் உள்ளன. அதன்படி கௌரவ பிரஜாவுரிமை பெறுவதற்கு புகழுக்குரியவர்களுக்கு வாய்ப்பு உள்ளது. இவ்வாறு இலங்கையில் இரட்டை பிரஜாவுரிமை பெற்ற புகழுக்குரிய ஒருவர் தான் சர் ஆர்தர் சி கிளார்க். அதேபோன்று பல்வேறு நாடுகள் வேறு நாடுகளுடன் இருக்கும் இராஜதந்திர தொடர்புகள் காரணமாக மற்றொரு நாட்டின் பிரஜாவுரிமையை பெறுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றது. அமெரிக்காவின் கிரீன் கார்ட் முறை இலங்கையர் ஒருவருக்கு வேறொரு நாட்டில் பிரஜாவுரிமை பெறுவதற்கு வாய்ப்பாக உள்ளது. சில நாடுகளில் பிரஜாவுரிமை பெற்றால் அவர்களுக்கு இரட்டை பிரஜாவுரிமை பெற முடியாது. ஜேர்மனி பிரஜாவுரிமை பெற்றவருக்கு வேறு நாடுகளில் பிரஜாவுரிமை பெற முடியாது. அதற்கு காரணம் ஜேர்மன் இரட்டை பிரஜாவுரிமையை அங்கீகரிக்காமையாகும்.

வெளிநாட்டு பிரஜை ஒருவர் இலங்கையில் பிரஜாவுரிமை பெற்ற பின் இரட்டை பிரஜாவுரிமை பெற முடியாதென குடிவரவு குடியகல்வு திணைக்கள ஊடக பேச்சாளர் லக்ஷான் டி சொய்சா குறிப்பிட்டுள்ளார். இலங்கை பிரஜாவுரிமை உள்ள ஒருவருக்கு மட்டுமே இரட்டை பிரஜாவுரிமை பெறும் வாய்ப்பு உள்ளது. எனினும் திருமணம் ஒன்றின் மூலம் வெளிநாட்டவர் ஒருவருக்கு இலங்கை பிரஜாவுரிமை பெற்றுக்கொள்ளலாம். இலங்கை பெண் ஒருவரை வெளிநாட்டு ஆண் ஒருவர் திருமணம் செய்தால் அவருக்கு இலங்கையில் வாழ்வதற்கு விசேட வீஸா அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகிறது. வாழ்க்கை துணை ஒருவருக்கு வீஸா அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகிறது. ஆனால் அதனை பிரஜாவுரிமையாக கருத முடியாது. எனவே இலங்கை ஆண் ஒருவர் வெளிநாட்டு பெண் ஒருவரை திருமணம் செய்தால் அவருக்கு இலங்கை பிரஜாவுரிமை பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறு அவர் பிரஜாவுரிமை பெறும்போது தனது ஆரம்ப நாட்டில் பிரஜாவுரிமையை நீக்கிக்கொள்ள வேண்டி ஏற்படுகின்றது. எனவே வெளிநாட்டவருக்கு இலங்கையில் இரட்டை பிரஜாவுரிமை வைத்திருக்க முடியாது. இலங்கையில் பிறந்த பிரஜைகளுக்கு மட்டுமே இரட்டை பிரஜாவுரிமை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு இருப்பதாக லக்ஷான் டி சொய்சா தெரிவித்தார். இலங்கை பிரஜை ஒருவர் மற்றொரு நாட்டில் பிரஜாவுரிமையை பெறும்பொழுது அவருக்கு இலங்கை பிரஜாவுரிமை இல்லாமல் போகின்றது. அவ்வாறு பிரஜாவுரிமை இல்லாமல் போவதற்கு முன் அல்லது வேறொரு நாட்டின் பிரஜாவுரிமை இல்லாமல் போன பின் ஆரம்ப பிரஜைகளுக்கு மீண்டும் இலங்கையின் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்து இரட்டை பிரஜாவுரிமை பெற்றுக்கொள்ளலாம். பிரஜை ஒருவர் இரட்டை பிரஜாவுரிமை தேவை என்ற கோரிக்கையை முன்வைத்தால் அந்த கோரிக்கை **1948 18**ஆம் இலக்க பிரஜாவுரிமை சட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கலாம். அச்சட்டத்தின் **19(2)** சரத்தின்படி மற்றொரு நாட்டில் பிரஜாவுரிமை பெற்றுக் கொண்டதனால் இலங்கையின் பிரஜாவுரிமை இழந்த ஒருவருக்கு இலங்கை பிரஜாவுரிமை






பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுக்கலாம்.

அத்தோடு மற்றொரு நாட்டின் பிரஜாவுரிமையை பெறுவதற்கு அண்மித்த நிலைமையில் இலங்கையின் பிரஜாவுரிமையை இரத்து செய்ய வேண்டாம் என கோரிக்கை விடுக்கலாம். குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கும் அவ்வாறான விண்ணப்பத்தின் கீழ் இலங்கையின் பிரஜாவுரிமை இருக்கும்போது மற்றொரு நாட்டின் பிரஜாவுரிமையை பெற்றுக்கொள்ளலாம். இலங்கையின் இரட்டை பிரஜாவுரிமை பெற தகுதியுள்ளவர்கள் இலங்கையர்கள் மட்டுமே. வெளிநாட்டவர்களுக்கு இரட்டை பிரஜாவுரிமை பெற முடியாது. இரட்டை பிரஜாவுரிமை பெற்ற ஒருவருக்கு சாதாரண பிரஜைக்குரிய எல்லா உரிமைகளும் கிடைக்கின்றன. வாக்களிக்கும் உரிமை உட்பட சகல வசதிகளும் இரட்டை பிரஜாவுரிமை பெற்றவர்களுக்கு கிடைக்கின்றன. ஆனால் பாராளுமன்றத்தில் தேர்தலுக்கு போட்டியிடும் சந்தர்ப்பத்தில் மட்டும் இரட்டை பிரஜாவுரிமை உள்ளவர்களுக்கு கிடைப்பதில்லை. **19**ஆவது அரசியல் யாப்பின் கீழே இதற்கான ஏற்பாடு உள்ளது. சட்டப்படி ஏதாவது தகைமை இல்லையென்று கூறினால் தவிர இரட்டை பிரஜைகளுக்கு இலங்கையில் உள்ள சகல வசதிகளும் கிடைக்கின்றன. எந்தவொரு பதவிக்கும் அவர் நியமனம் பெறலாம். அரசின் ஒரு செயலாளராகக் கூட அவருக்கு நியமனம் பெறலாம்.

**2011**ஆம் ஆண்டு இரட்டை பிரஜாவுரிமையை மட்டுப்படுத்துவதற்கான வாய்ப்பு இல்லாமல் செய்யப்பட்டது. அது அக்காலத்தில் இருந்த பாதுகாப்பு நிலைமையை கருதி இல்லாமல் செய்யப்பட்டது. மீண்டும் **2015**ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் பின் இரட்டை பிரஜாவுரிமை பெறும் வாய்ப்பு வழங்கப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் செல்ல வேண்டும் என ஆசைப்படுவோர் இரட்டை பிரஜாவுரிமை பற்றி சிந்திக்கவே கூடாது என கூறும் அளவுக்கு கீதாவின் வழக்கு தீர்ப்பு காரணமாக அமைந்தது.

NAVAMANI DAILY
நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

## வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் மனக் குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன்மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல : 96, கிருல வீதி, கொழும்பு – 05
தொலைபேசி : 011-5353635 பெக்ஸ் - 011-5335500
ஈமெயில் : pccsl@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

## ஸ்ரீ லங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தினால் பயிற்சி நெறி

ரமழான் விடுமுறை காலத்தை பயனுள்ளதாக அமைத்துக் கொள்வதை முன்னிட்டும், மாணவர்களது ஆன்மீக ஒழுக்க வாழ்க்கையை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் தரம் 6,7,8 மற்றும் 9ஆம் ஆண்டு மாணவர்களுக்கான (Spritual Awakening For Teen Agers) பயிற்சிநெறி இம்முறையும் நாடளாவிய ரீதியில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. நடைபெறும் திகதி. இடங்கள் பற்றிய விபரங்களை அறிந்து கொள்வதற்கும், உங்களது பெயர்களை பதிவு செய்து கொள்வதற்கும், மேலதிக தகவல்களுக்கும் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய மாவட்ட பொறுப்பாளர்களின் விபரம்:

புத்தளம் மாவட்டம் : ஆகிப் - 077 059 9778, கண்டி மாவட்டம் : நஸீப் - 077 471 0274மாத்தளை : சகோ மனாஸ் - 075 643 5656மட்டக்களப்பு : பயாஸ் - 077 505 3891, அம்பாறை : இப்ஜாஸ் - 077 418 2793கேகாலை மாவட்டம் : அப்பான் - 076 995 5323, களுத்துறை : குஸ்தி 077 579 2470, கம்பஹா : ஆமிர் - 077 452 4689,கொழும்பு : உஸாமா - 077 164 8022, காலி : பாஸில் - 071 642 0016 அநுராதபுர : ரிழ்வான் - 077 650 1621ஏனைய மாவட்டங்கள் : பஸ்லான் - 076 729 5910, நஸீப் - 077 932 0809 அஸாபிர் தேசிய பகுதி - 077 293 0619.

# இனவாத நடவடிக்கைகளை ஒன்றிணைந்து தோற்கடிப்போம்

## கரந்தகொட விகாராதிபதி ஞானவிசுத்தி தேரர்

(பேருவளை முக்தார்)

சிங்கள மன்னர்களது காலம் முதல் இருந்துவரும் இனங்களுக் கிடையிலான உறவு என்றும் சீர்குலைந்த விடக்கூடாது இனங்களுக்களுக்கிடையிலான ஒற்றுமையின் மூலமே நாட்டை கட்டியெழுப்ப முடியும் எனவே நாம் அனைவரும் ஒற்றுமையாக வாழ்வதுடன் ஒற்றுமையை சீர்குலைக்கும் முயற்சி களை ஒன்றிணைந்து தோற்கடிப்போம். பேருவளையில் இன்று இடம்பெறும் இந்த வைபவமானது முழு நாட்டிற்கும் ஒரு முன்மாதிரியாக அமையட்டும் என பேருவளை கரந்தகொட கெத்தாராம விகாரை அதிபதி குருவிட ஞானவிசுத்தி தேரர் கூறினார்.



இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு அமைப்பினால் கண்டி டெவன் ஹோட்டலில் ஒழுங்கு செய்திருந்த ஊடகவியலாளர்களுக்கான இக்கருத்தரங்கில் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு அதிகாரி அதிகாரி கமல் லியன ஆராச்சி உரையாற்றுவதனைபடத்தில் காணலாம். (மடவள பஸார் நிருபர் குஷ்தி)

பேருவளை கரந்தகொடை ஹேன மரக்கலவத்த கிராம சேவைப்பிரிவில் 24 வருட காலமாக குடும்ப சுகாதார சேவை அதிகாரியாக கடமையாற்றி ஓய்வு பெற்ற திருமதி நந்தா பெரேராவை கௌரவிக்கும் வகையில் நடாத்தப்பட்ட சேவை நலன் பாராட்டு விழா நேற்று மாலை கரந்தகொட கெத்தாராமா விகாரையில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதேச சிங்கள முஸ்லிம் மக்கள் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வில் சீனன்கோட்டை எகொடவத்த தாருல் உலூம் மஸ்ஜித் ஸாவியா சார்பில் ஓய்வு பெற்ற நந்தா பெரேராவுக்கு தங்கப்பவுண் ஒன்றுடன் ஞாபகார்த்த நினைவுச்சின்னமும் வழங்கப்பட்டது. நினைவுச்சின்னத்தை பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர் மிஸ்வர் காஸிமும் தங்கப்பவுணை பள்ளிவாசல் நிர்வாகி எம்.ஜே எம். ராஸிக் ஜே.பியும் கையளித்தனர். பள்ளிவாசல் நிர்வாகி ஏ.ஐ.எம். ஹாரிஸ் ஜே.பி முஸ்லிம் மக்கள் சார்பில் உரையாற்றினார். பள்ளிவாசல் நிர்வாகி எஸ்.எம்.பளீல் சீனன்கோட்டை பவுன்டேஷன் தலைவர் பஸால் மர்ஸூக் முகத்தமுஷ்ஷாதுலி எம்.எஸ்.எம். ஸாபிர் ஜே.பி உட்பட முஸ்லிம் பிரமுகர்கள் பலரும் நிகழ்வில் பங்குபற்றினர்.

குருவிட ஞானவிசுத்தி தேரர் மேலும் கூறுகையில்,இந்நாட்டில் சிங்கள மன்னர்களது காலம் முதல் இருந்து வரும் சிங்கள முஸ்லிம் ஒற்றுமை சீர் குலைந்து விடாது நீடித்து நிலைக்க வேண்டும். நாம் 100 வருட காலமாக ஒற்றுமையாக வாழ்ந்து விட்டு 101 ஆவது ஆண்டில் சண்டை பிடித்துக்கொண்டு ஒருவரை ஒருவர் அழித்துக்கொண்டால் 100 வருடம் ஒற்றுமையாகவாழ்ந்ததில் பலனில்லை.

ஏனைய இன சமூகத்தினருடன் எப்படி வாழ வேண்டும் ஏழை எளிய மக்களுக்கு எப்படி உதவி ஒத்தாசை செய்ய வேண்டும் என்பதை நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்கள் போதித்துள்ளார்கள். மட்டுமன்றி வாழ்ந்தும் காட்டியுள்ளார். நபிகளாரின் அழகிய முன்மாதிரிகள் காரணமாக அன்று இஸ்லாம் வேகமாக பரவியது. என்றார்.

## ஓம்சத் நடத்தும் கலந்துரையாடலில் ரிகாஸ் றஹ்மான்



ஓம்சத் அமைப்பு ஏற்பாடு செய்து வாழ்க்கை அனுபவம் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 24 ஆம் திகதி மாலை 6.45 மணியளவில் கொழும்பு 10 டி..ஆர் விஜேவர்த்தன மாவத்தையிலுள்ள கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

ரிகாஸ் வளாகத்தின் தலைவர் பொறியியலாளர் அப்துர் றஹ்மான் இதில் உரையாற்றுவார். ஓம்சாத் முஸ்லிம் சமய கலாசாரத்திணைக் களத்துடன் இணைந்தே இதனை ஏற்பாடு செய்துள்ளது.

## ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட கொள்கைத் தீர்மானங்களுக்கு தெற்காசிய தொழில்நுட்பம் ஆதரவு

அரசாங்கத்தினாலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினாலும் முன்வைக்கப்பட்டுள்ள கொள்கைத் தீர்மானங்களுக்கு தெற்காசிய தொழில்நுட்ப மற்றும் மருத்துவ கல்வியகம் நிர்வாகம் தனது முழுமையான ஆதரவை வழங்கும் என அறிவித்துள்ளது.

மருத்துவ கல்வியின் தரத்தை மேம்படுத்துவது மற்றும் கல்விச் சுதந்திரத்தை உறுதி செய்வது தொடர்பில் அரசாங்கத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கொள்கைத் தீர்மானங்கள் தொடர்பில் தெற்காசிய தொழில்நுட்ப மற்றும் மருத்துவ கல்வியகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் பட்டியலிடுவதனூடாக அதன் உரிமையாண்மையை பன்முகப்படுத்துவது தொடர்பிலும் தெற்காசிய தொழில்நுட்ப மற்றும் மருத்துவ கல்வியக நிர்வாகம் அதன் விருப்பை வெளியிட்டுள்ளது.

புதிய மாணவர்களை இணைத்துக்கொள்வதை இடைநிறுத்துமாறு குறிப்பிடப்பட்டிருந்த பரிந்துரையின் பிரகாரம், அரசாங்கத்துடன் கைகோர்த்து செயலாற்ற சைட்டம் தயாராகவுள்ளதுடன், அதனூடாக துரித கதியில் பிரேரிக்கப்பட்டுள்ள விடயங்களை உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் முன்னெடுப்பதற்கும் உதவிகளை வழங்க தயாராகவுள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

நாட்டின் கல்விச் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு அரசாங்கம் எவ்வேளையிலும் முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதில் கல்வியகத்தின் தலைவரும் நிர்வாகத்தினரும் முழுமையான நம்பிக்கையை கொண்டுள்ளதாகவும் இலங்கையில் சகல அரச, தனியார் மருத்துவ பீடங்களிலும் பாகுபாடின்றி தரமான மருத்துவ கல்வியை பேணுவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் சகல செயற்பாடுகளுக்கும் சைட்டம் தனது பூரண ஆதரவை வழங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உஸ்தாத் மன்சூரின் குர்ஆன் விளக்கவுரை

(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை இல்மாஹ் இஸ்லாமிய ஆய்வு மையத்தின் ஏற்பாட்டில் உஸ்தாத் மன்சூர் எழுதிய குர்ஆனின் சிந்தனை ஜுஸ்உ அம்ம விளக்கவுரை பாகம்-1 அறிமுக விழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு திருமலை ஸாஹிராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற வுள்ளது.இவ் அறிமுக விழாவுக்கு அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இவ் ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுக்கின்றனர்.

## மொனராகலை சிறையில் பள்ளிவாசல் திறப்பு விழா

சிறைச்சாலைகளில் சர்வ மத வழிபாட்டுத் தலங்களை அமைப்பதன் ஊடாக நல்ல சமூகமொன்றினை கட்டியெழுப்பும் திட்டத்துக்கு அமைவாக மொனராகலை சிறைச்சாலை வளாகத்தில் முஸ்லிம் பள்ளிவாசலொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதனை புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கவுள்ளார்.

எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு மொனராகலை சிறைச் சாலை வளாகத்தில் நடைபெறவுள்ள பள்ளிவாசல் திறப்பு விழா நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளதுடன், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்ற மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் விக்கிரமசிங்க, சிறைச் சாலை ஆணையாளர் நாயகம் எம்.எம். என்.சீ.தனசிங்க உள்ளிட்ட பல முக்கிய அதிகாரிகளும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## அரச வைத்தியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு





( அட்டாளைச்சேனை எம்.ஏ.றமீஸ்)

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் ஏற்பாடு செய்த வைத்தியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு நேற்று (22) நாடளா விய ரீதியில் இடம்பெற்றது. நேற்றுக் காலை 8 மணி முதல் ஆரம்பமான பணிப்பகிஷ்கரிப்பு 24 மணி நேரம் வரை தொடரவுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

பல்கலைக்கழக மாணவர்கள் மீது மேற்கொண்ட தாக்குதல், மாலபே தனியார் கல்லூரி மாணவர்களை வைத்தியர்களாக உள்வாங்கக் கூடாது மற்றும் அரச மருத்துவத்துறையினைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தே வைத்தியர்களின் இப்பணிப் பகிஷ்கரிப்பு நேற்றைய தினம் இடம்பெற்றது.

இதற்கமைவாக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையிலும் பணிப்பகிஷ்கரிப்பில் வைத்தியர்கள் ஈடுபட்டதால் வெளி நோயாளர் பிரிவு, கிளினிக் சேவை என்பன நடைபெறவில்லை. இதனால் வைத்தியசாலைக்கு தூரப்பிரதேசங்களிலிருந்தும் வருகை தந்த நோயாளர்கள் பல்வேறான சிரமங்களை எதிர்நோக்கியதாகவும் தெரிவித்தனர்.

## சிறுநீரக சத்திர சிகிச்சைக்கு உதவி புரியுங்கள்

வேறெல்லகம பல்கும்புர பிரதேசத் தைச் சேர்ந்த முஹிதீன் அலி முஹம்மத் றிஸ்வான்(வயது-42) என்பவர் இரு சிறு நீரகங்களும் பழுதடைந்த நிலையில் சிறு நீரக மாற்று சத்திர சிகிச்சை மேற்கொள ளப்பட வேண்டிய கட்டாயத்தில் உள்ளார். தேசிய அடையாள அட்டை இல.742574210வி உடைய இவர் வைத்தியக் கலாநிதி வித்யாஜோதி றிஸ்வி ஷரீபின் பொறுப்பில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

முஹிதீன் அலி முஹம்மத் றிஸ்வானின் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை மற்றும் மருத்துவ செலவுகளுக்காக 1,850,000.00 ரூபாய்கள் தேவைப்படுவதாகவும், மேற்படி தொகை கிடைக்கப்பெறும் போதே நோயாளியை சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் அனுமதிக்க முடியும் என்றும் வைத்தியக் கலாநிதி வித்யா ஜோதி றிஸ்வி ஷரீப் ஒப்பமிட்டு மருத்துவ சான்றிதழ் வழங்கியுள்ளார்.

முஹிதீன் அலி முஹம்மத் றிஸ்வானின் மருத்து செலவுகளுக்கு உதவ விரும்பு பவர்கள் அவரது மனைவி நூருல் நிசா அபூபக்கரின் மக்கள் வங்கி கட்டுகஸ் தொட்ட கிளை கணக்கு இல. 089-2-001-0-0005040 என்ற கணக்குக்கு உங்கள் நிதி உதவிகளை வைப்பிலிடலாம்.

## சர்வமத பேரவை ஏற்பாட்டில் புத்தளத்தில் செயலமர்வு





( புத்தளம் நிருபர் )

புத்தளம் மாவட்ட சர்வமத பேரவையின் ஒழுங்குபடுத்தலுடன் தேசிய சமாதானப் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட நல்லாட்சி மற்றும் நிலைமாறுகால நீதி தொடர்பான பயிற்சி செயலமர்வொன்று கடந்த சனிக்கிழமை புத்தளத்தில் நடைபெற்றது.

புத்தளம் வொடப்ட் அமைப்பின் நிகழ்ச்சித் திட்ட அதிகாரி திருமதி யூ. முஸ்னியாவின் தலைமையில் நடைபெற்ற இந்த செயலமர்வில் புத்தளம் மாவட்ட சர்வமத பேரவையின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

ஜனநாயகம் மற்றும் நல்லாட்சி தொடர்பான பகுப்பாய்வு என்ற தலைப்பில் ஊடகவியலாளர் ஆனந்த தர்மப்ரிய ஜயசேகரவும் நிலைமாற்ற நீதி என்றால் என்ன என்ற தலைப்பில் கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் எம்.எஸ். மூகையா ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு விரிவுரைகளை நடாத்தினர்.

## குருநாகல் மாவட்ட பள்ளிவாசல்களுக்கு பாதுகாப்பு வழங்க நடவடிக்கை

### றிஸ்வி ஜவஹர்ஷா

குருநாகல் மல்லவப்பிடிய ஜும்ஆ பள்ளிவாயில் இனந்தெரியாத நபர்களால்நள்ளிரவு பெட்ரல் குண்டுதாக்குதல் இடம்பெற்றதை தொடர்ந்து பிரதேசத்தில் பதற்றநிலை தோன்றியுள்ளது. இதை தொடர்ந்து இன்று காலை குறித்த

பள்ளிவாயிலுக்கு நேரடியாக விஜயம் செய்த வடமேல் மாகாண சபை உறுப்பினர் றிஸ்வி ஜவ்ஹர்ஷா பள்ளிவாயில் நிர்வாகிகளுடன் சந்தித்து நிலைமைகளை கேட்டறிந்துள்ளார்.

குருநாகல் மாவட்டத்தில் பிரதான வீதியூடாக அமைந்துள்ள பள்ளிவாயில்களுக்கான பாதுகாப்பு வழங்கும் வகையில் ரமழான் மாதம் முழுவதும் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என்ற நடவடிக்கையை ஸ்ரீ.ல.மு.கா. தேசிய தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹகீம் அவர்களை தொடர்பு கொண்டு வேண்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தொழுகை நேரங்கள்

23.05.2017

| சுபஹ் | ளுஹர் | அஸர் | மஃரிப் | இஷா |
|---|---|---|---|---|
| 4.33 | 12.08 | 3.32 | 6.21 | 7.36 |

கொழும்பு மாவட்டம் ஏனைய இடங்களுக்கு நேர வித்தியாசத்தை கவனிக்கவும்

கலைவாதி கலீல்



கலை - இலக்கியம் - விமர்சனம்



# பாரம்பரியத்தில் காப்பியக்கோ

'கவிக்கோ' என்றால் தமிழகப் பெருங்கவிஞர் அப்துர் றகுமான்தான் ஞாபகத்துக்கு வருவார். அவ்வாறே 'காப்பியக்கோ' என்றால் டாக்டர் ஜின்னா ஷெரிபுத்தீன் தான் ஞாபகத்துக்கு வருவார். (ஸ்ரீலங்கா முஸ்லிம் கலைஞர் முன்னணிதான் 'காப்பியக்கோ' என்ற பட்டத்தை முதன் முதலில் வழங்கியது என்பதைப் பலரும் மறந்திருப்பார்கள்)

தனது தந்தை வழித்தனயனாக, யாப்பிலக்கணத்தை முறைப்படி பயின்று, யாப்புக் கவிதைகளை யாப்பதில் வல்லவரான ஜின்னா ஷெரிபுத்தீன், தளை தட்டாமல் வெண்பா பாடுவதிலும் வல்லவர் என்பது மிகைப்பட்ட கூற்றல்ல. நவீன காப்பியங்கள் பலவற்றை யாத்து பல தேசிய விருதுகளையும் பெற்றவர்.

இந்தப் பீடிகையெல்லாம் எதற்கு என்று யோசிக்கிறீர்களா? இன்று இரவு இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் இவரது 'நேர்காணல்' ஒன்று இடம்பெறவுள்ளது. தனது அநுபவங்களையும் ஆற்றல்களையும் சுவையான வரலாற்றுப் பதிவுகளையும் நேயர்களுடன் பகிர்ந்து கொள்வார் ஜின்னா என நம்பலாம்.

இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் ஜனரஞ்சக நிகழ்ச்சிகளில் ஒன்றான 'பாரம்பரியம்' என்ற நிகழ்ச்சியிலேயே இவரது பேட்டி இடம்பெறவுள்ளது. இரவு 8.15 மணிக்கு.

மாதத்தின் முதலாம் நான்காம் (இறுதி) செவ்வாய்க்கிழமைகளில் இடம்பெறும் நிகழ்ச்சிதான் பாரம்பரியம். இன்று இம்மாதத்தின் நான்காம் செவ்வாய்க்கிழமையல்லவா!

முஸ்லிம் சேவைப்பணிப்பாளர் ஹாபிஸ் எஸ். முஹம்மது ஹனீபாவின் நெறிப்படுத்தலில் மூத்த வானொலிக் கலைஞர் கலாபூஷணம் எம்.எஸ்.எம். ஜின்னா பாரம்பரியத்தை தொகுத்து வழங்குவது நேயர்கள் (வாசகர்கள்) அறிந்ததே! ஜின்னாவும் ஜின்னாவும் இன்று சந்திக்கிறார்கள்.

நிகழ்ச்சியைச் செவிமடுத்த பின்னர் நேயர்களின் எண்ணக்கருக்களை ஜவதரங்கம் எதிர்பார்க்கிறது.... எழுதுங்கள்...

# வெற்றித் திருமகள் நீ!

சிறுகதை

கல்லூரியின் உயர்ந்த இடமான பள்ளிவாசலின் முன் நின்று கொண்டிருந்தார் அதிபர் ஸபீனா.

கடந்த 5 வருடங்களாக கிழமைக்கு ஒரு தடவையாவது பார்த்து ரசிக்கும் காட்சி, இன்று ஏனோ அவளுக்கு வித்தியாசமாக இருக்கிறது. கல்லூரி வளாகத்தில் உள்ள அனைத்து கட்டடங்களும் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு அது ஒரு பெரிய நகரத்தின் விழாக்கோலக்காட்சியாக ஒளிர்ந்தது.

அதோ நாட்புறமும் வேலியடைக்கப்பட்டு - நடுவில் குளத்தோடும் வண்ண அலங்காரத்தோடும் மின்னும் ஆரம்பப்பிரிவு, பாலர் மைதானம், நூலகம், இந்தப் பக்கம் 4 மாடிக்கட்டிடங்கள் பல அமைந்த மத்திய பகுதி. அதன் கோடியில் விஞ்ஞானக் கூடம், மனையியல் கூடம், கணனி அறை, உயர் தர வகுப்புக்கள், பள்ளிவாசலுக்கு கொஞ்சம் கீழே தொழில் பயிற்சிக் கூடம், அத்தோடு ஆசிரியர் விடுதி. 25 ஏக்கரில் இவ்வளவும் கச்சிதமாக அமைந்தது எல்லாமே ஒரு மாயா லோகமாக பிரகாசித்தது. எவ்வளவுதான் பார்த்தாலும் கல்லூரியின் அமைப்பும், அழகும் அவளுக்கு அலுப்படிக்கவில்லை. ஆனால் இப்போது நெஞ்சுக் கூட்டிலிருந்து இருதயம் கழன்று விடுவதைப் போல ஓர் உணர்வு. நினைத்து நினைத்து தனிமையில் எத்தனையோ முறை அழுதுவிட்டாள்.

இனி என்னால் முடியுமா? இந்த பெரும் அழகை ரசிக்க முடியுமா, யாருமே வரக் கூடாது என்று கடுமையாக பணித்துவிட்டு மேலே வந்த அதிபர் ஸபீனா மனம் ஆறுதல் அடையும் மட்டும் தன் கண்ணீரை கல்லூரிக்கு காணிக்கையாக்கினார். மனம் அமைதி பெற்றது. மெதுவாக ஒவ்வொரு படியாக கீழே இறங்கினார். அவர் இறங்கிய போது, அவருடைய எண்ணமும் பின்னோக்கி இறங்கியது.

அன்று அந்தக் கல்லூரிக்கு ஒரு பொன்னாள்.

அதிபர் ஸபீனா அங்கு காலடி வைத்தார்.

"ஆண்களாலே செய்ய முடியாத இந்தக் கல்லூரியை இவளா செய்யப் போகிறாள்? ஒரே மாதத்தில் ராஜினாமாக் கடிதம் கொடுத்து விட்டு மறைந்து விடுவாள்" என்று ஒரு சாரார்,

"இந்த ஊர் மக்களைப் பத்தி இவளுக்குத் தெரியாது. கூடினால் 6 மாதம் வந்த இடமே தெரியாது மாற்றலாகி போய்விடுவாள்" என்று மற்றொரு சாரார்,

"மமா, ஒருவருமே போக இஷ்டப்படாத ஓர் இடத்துக்கு நீங்க போய் ஏன் கஷ்டப்படனும் பேசாம என் கூட அமெரிக்கா வந்துடுங்க" இது மூத்த மகன்.

"மமா, சின்ன ஸ்கூல் வசதியான ஸ்கூல், ஊர் மக்களும் மிகவும் நல்லவங்க. போக்குவரத்து கஷ்டமும் இல்ல. என் கூடவே தங்கிக்கலாம்" அது இளைய மகனின் வேண்டுகோள்.

ஆரம்பம் முதலே தடைகள். மஹ்மூத் மகாவித்தியாலத்துக்கு அதிபராக வர வேண்டும் என்று அமைச்சு மூலம் கடிதம் வந்தது முதல் அவளுக்கு சாதகமாக எந்த ஒரு பதிலும் கிடைக்கவில்லை. அமைச்சின் ஆணைக்கு பின் அந்த ஊர் நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள் வந்து அழைப்பு கொடுத்தனர். ஸபீனாவின் பிள்ளைகளுக்கு கொஞ்சம் கூட தனது தாய் ஊருக்கு இந்த வயதில் தொழில் செய்யப் போவது பிடிக்கவே இல்லை. இதுவரை சாதாரண ஆசிரியராக இருந்த அவர், அதிபர் பரீட்சையில் சித்தியடைந்தவுடன் வேறு ஊருக்கு மாற்றி விட்டனர். இதுவரை ஆசிரியத் தொழிலில் அவள் செய்த செயல்களுக்கும், வெற்றிகளுக்கும் உறுதுணையாக இருந்தவர் அவளது கணவர். இப்போது அவர் கூட அமைதியாக இருக்கிறாரே!

குழந்தைகள் தன் பாசத்தை மட்டும் காட்டுகிறார்கள். அவரால் பாசத்தை மட்டுமா காட்ட முடிந்தது. இந்த வயதிலும் இப்படி சுறுசுறுப்பாகவும், ஆரோக்கியத்தோடும், செயற்திறனோடும் அவள் இயங்குவது என்றால் அது அவள் கணவர் தந்த ஒத்துழைப்பும், உதவியும்தான். அவள் மனதை நன்கு அறிந்தவரும் அவர் ஒருவர்தான். அப்படிப்பட்டவர் அமைதியாக இருப்பது என்றால், அவள் ஓய்வை அவரும் விரும்புகிறாரா. அல்லது, அவருக்கு அவள் மீதும், அவள் ஆற்றல் மீதும் சந்தேகம் வந்துவிட்டதா, தான் படித்த கல்லூரியை ஆழமாக நேசித்தாள் ஸபீனா. அதன் பெயரில், அழகில், அமைப்பில் அவளுக்கு பெரிய ஈடுபாடு. நாட்டின் பல பாகங்களிலும் சுற்றி கடமை புரிந்தாலும் எப்போதாவது தான் படித்த கல்லூரியல் உழைக்க வேண்டும். முழு நேர உழைப்பு, அர்ப்பணிப்பு, தியாகம் எல்லாம் கொடுக்க வேண்டும் என்ற ஒரு பேராசை. அதற்கேற்றாப் போல,

அழைப்பும் வந்தது. ஆசிரியராக அல்லாமல் அதிபராக.

ஒரு காலத்தில் தலைசிறந்த கல்லூரியாகத் திகழ்ந்த அக்கல்லூரி, தற்போது பல விதத்திலும் தன் பெருமையை இழந்து கொண்டிருந்தது. எத்தனையோ பேர் வந்தார்கள், போனார்கள். ஆனால் ஒரு பாரிய மாற்றம் கல்லூரிக்கு கிடைக்கவேயில்லை. மிக அதிகமாக கஷ்டப்பட்டால்தான் கல்லூரியை பழைய நிலைமைக்கு கொண்டுவர முடியும். அதற்கு கல்லூரிக்கு முழுமையாக தன்னை அர்ப்பணிக்கும் ஓர் உயிர் வேண்டும். ஸபீனாவுக்கு பிரச்சினைகளோ, சுமையோ இல்லை. பிள்ளைகளுக்கு தேவையானதை செய்து கொண்டு வருகிறான். கணவரும் ஊரில் முக்கிய புள்ளி. பழுத்த அரசியல்வாதி. அதிபராக கடமையாற்றாவிட்டாலும் ஸபீனா



- திருமதி கே. எஸ். நூர்ஜஹான் பவ்சர்

அதிபர்களுக்கு எல்லா வகையிலும் உதவும் ஆசிரியர்களில் ஒருத்தியாக இருந்து பாடசாலையின் முன்னேற்றத்திற்காக உழைப்பவள். பாடசாலையின் நிர்வாகம், முகாமைத்துவம், கற்றல் செயற்பாடுகள், பெற்றோர், ஆசிரியர் இணைப்பு, பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றோடு பாடசாலை தொடர்பு என்பனவற்றை நன்கு அறிந்திருந்தாள்.

இராணுவத்தில் இருந்த தன் தந்தையின் உழைப்பும், நேர்மையும் தன் கணவரிடமிருந்த எந்த வேலையும் திறமையாக முடிக்கும் செயற்திறனும் அவளுக்கு இருந்தது. ஸபீனா எந்த வேலையைச் செய்தாலும் மிகச் சிறப்பாக மட்டுமன்றி முதல் தரமாகவும், திட்டமிட்டுச் செய்யவும் ஆற்றல் பெற்றிருந்தாள். தன் ஆற்றல் முழுவதையும் ஒன்று சேர்த்து தன் கல்லூரிக்கு கொடுத்தால், முடியும். அல்லாஹ் நாடினால் நிச்சயமாக முடியும் என்ற மன உறுதியோடு தன் கணவரிடம் அனுமதி கேட்டாள். பிள்ளைகளையும் சமாளித்து, அவர் அவளோடு பயணத்திற்குத் துணை நின்றது அவள் பெற்ற பெரும் பாக்கியம். கல்லூரியை பாரமெடுத்த பின், அவள் செய்த முதல் வேலை கல்லூரியின் எல்லையை உறுதிப்படுத்தி பிரத்தியேக வழிகளை அடைத்தார். பகுதி பகுதியாக பெற்றோர்களைக் கொண்டு சுத்தப்படுத்தினார். கல்லூரியின் ஒரு கல்லைக் கூட அவள் வீணாக்கவில்லை. வேற்றாருக்கு கொடுக்கவுமில்லை. பெற்றோருடன் சேர்ந்து மண் வெட்டினாள். பெண்களோடு பெண்ணாகச் சேர்ந்து வேலை செய்தாள். அவளின் செய்கையும், பேச்சும், சுறுசுறுப்பும் பெற்றோர்களிடையே நல்ல வரவேற்பைத் தந்தது.

பெரும்பாலான பெண்கள் அவர் மீது மிகவும் அபிமானமும், ஆதரவும் வைத்தனர். பௌதீக வளங்களை சீர்படுத்திக் கொண்டே அவள் கற்றல் செயற்பாடுகளை கவனித்து ஒழுங்குபடுத்தினாள்.

கல்லூரியின் அத்திவாரமாக ஆரம்பப் பிரிவு அலைக்கழிக்கப்பட்டு இருந்தது. அங்கு மிகுமாக இருந்த தரம் (1-5) வரையிலான வகுப்புக்களை எல்லாம் ஒரே இடத்துக்கு கொண்டு வந்து ஆரம்பப்பிரிவை ஒரு தனிப் பாடசாலையின் தரத்திற்கு கொண்டு வந்தார். தரம் 5 மாணவர்களின் புலமைப் பரிசில் பரீட்சைக்கு தரம் (1-5) வரை வகுப்புக்கள் ஒழுங்காக இருக்க வேண்டும் என்பதை அறிந்த அவர், புலமைப்பிரிசில் பரீட்சைக்காக சகல வித வசதிகளையும் செய்து கொடுத்தார். கல்லூரியிலே மேலதிக வகுப்பு, செயலமர்வுகள், முன்னோடிப்பரீட்சைகளுக்கு வழி அமைத்தார். பாடசாலையின் பழைய மாணவர்கள் இதற்கு பெரிதும் உதவி செய்தனர். அதே நேரத்தில் பலவித விழாக்களை வைத்து அமைச்சர்களையும் அதிகாரிகளையும் அழைத்து பாடசாலைக்குத் தேவையான கட்டடங்கள், கணனிகள், விளையாட்டு உபகரணங்கள் என்பவற்றை பெற்றுக் கொண்டாள்.

மாணவர்களின் ஒழுக்கத்தைப் பேணுவதில் அதிபர் ஸபீனா மிக கண்டிப்பாக இருந்தார். தேவையின்றி ஆண், பெண் உரையாடலை தவிர்த்து அதில் கடுமையாக இருந்தார். நாளின் முக்கியத்துவத்தை உணர்ந்து பெற்றோர், மற்றோர் வரவை கட்டுப்படுத்தினார். கல்லூரியின் சிகரம் போன்ற பள்ளிவாசலை உயிர்பித்து, அதில் தினமும் நடக்கக் கூடிய நிகழ்ச்சிகள் மாதம் ஒரு முறை வருடத்திற்கு ஒரு முறை நடக்கும் நிகழ்ச்சிகளையும் தயார்படுத்தி முறையாக நடத்திக் கொண்டு வந்தார்.

ஆசிரியர்களின் திறமைகளை இனங்கண்டு அவர்களுக்கு ஏற்ற பொறுப்புக்களைக் கொடுத்து வேலை வாங்குவதில் மட்டுமல்லாது பெற்றோர்களிலும் திறமையானவர்களிடம் வேலை வாங்குவதில் சிறந்து விளங்கினார். எவ்வளவுதான் உயிரைக் கொடுத்து உழைத்தாலும் மொட்டை கடிதம் மூலமாகவும், தொலைபேசி மூலமாகவும் சில பொது இடங்களிலும் அவள் மேல் குறை கூறக் கூடியவர்களும் இருந்தனர். என்றாலும் ஸபீனாவின் ஒரே குறிக்கோள் கல்லூரியின் முன்னேற்றம். சகல விதத்திலும் முன்னேற்றம். எனவே, அவள் எதைக் கண்டும் தளரவில்லை. கவலைப்படவுமில்லை. அதைப் பொருட்படுத்தவும் இல்லை. கல்லூரியின் கிரிக்கெட் அணியினை பாகிஸ்தான் கிரிக்கெட் அணியுடன் சேர்ந்து விளையாட வைத்து கல்லூரியின் தரத்தை சர்வதேச தரத்திற்கு உயர்த்தினார்.

5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள், சாதாரண, உயர்தர பரீட்சைப் பெறுபேறுகள் அவள் காலத்தில், மாகாணத்திலே முதல் இடத்தைப் பெற்றன. நாட்டின் பல விழாக்களுக்கு பாண்டு வாத்தியம் கொண்டு செல்லப்பட்டன. நாட்டின் பல பாகங்களிலும் இருந்து மாணவர் இக்கல்லூரிக்கு கற்க வந்தனர். அவர்களுக்கு நல்ல விடுதி வசதி செய்து கொடுக்கப்பட்டது. அகில இலங்கையிலும் கல்லூரியின் வளர்ச்சியும், பெறுமதியும் பேசப்படுகின்றது.

ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் கணிசமான தொகையினர் தெரிவாகினர். கல்லூரியின் தலைவியாக மட்டுமன்றி தாயாகவும் இருந்து கல்லூரியை வளர்த்துவிட்டாள். இந்த 5 வருட காலத்தில் அவள் பட்ட வேதனைகள், சவால்கள், எதிர்ப்புகள், ஏமாற்றங்கள் எல்லாவற்றையும் வெற்றிகொண்டு இன்று தலை நிமிர்ந்த தலைவியாக ஓய்வு எடுக்க முடிவு செய்து விட்டாள். கல்லூரி இனி வளர்ந்து விடும். அதன் வளர்ச்சிக்கான வித்து நன்கு வளர்ந்து ஒவ்வொரு ஆசிரியர் மாணவர்களின் விருட்சமாக வளர்ந்துவிட்டது. அது அவளுக்குப் போதும்.

"மெடம் எல்லோரும் உங்களுக்காக காத்துக்கொண்டு இருக்கின்றோம்"

ஓய்வு எடுத்த நான் முதல் ஒரு கிழமையாக அவளுக்கு பிரியாவிடை விழா. தன் இலட்சியத்தினை வெற்றிகொண்ட வெற்றித் திருமகளாக அவள் விடைபெறுகிறாள்.

★★★

# தரிப்பு

# அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வின் முன்மாதிரி

கடந்த சனிக்கிழமை கஹட்டோவிட்ட, அல் - பதுரியாவில் ஒரு விழா! காலை முதல் மாலை ஏழுமணி வரை ... அலுப்புத் தட்டியிருக்குமே என்று கூறிவிடாதீர்கள். உண்மையில் அலுப்புத்தட்டவில்லை. அதற்குச் சான்றாதாரம் என்னவென்றால் முன் வரிசையில் அமர்ந்திருந்த மாணவமணிகள் ஏழு மணிவரை கதிரையில் அமர்ந்திருந்தனர். எல்லா வரிசைகளும் அப்படித்தான். இரண்டொருவர் எழுந்து சென்றாலும் புதியவர்கள் வந்தமர்ந்து கொண்டனர். பரிசளிப்பு வைபவத்தின் போது மண்டபம் பிரமுகர்களால் நிறைந்திருந்ததோடு, வெளியிலும் பலர் நின்றனர்.

இரட்டை விழாஅது! ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின், பாடசாலை மாணவர்களுக்கான ஊடகக் கருத்தரங்கும் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் மற்றும் ஆற்றல்மிக்க மாணவர்களைக் கௌரவிக்கும் விழாவுமாக நடைபெற்ற இவ்விழாவில், 'சியன' ஊடக அமைப்பு ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்துடன் இணைந்து கொண்டது.

கஹட்டோவிட்டையைச் சேர்ந்த, இலங்கையின் ஊடகத்துறை ஜாம்பவான்களான ஸிராஜ் எம். சாஜஹான், எம். இஸட். அஹமத் முனவ்வர், பியாஸ் முஹம்மத், பஸ்ஹான் நவாஸ், எம்.எம். முஹிடீன் ஆயோரின் சிறப்பான ஏற்பாட்டில் நடைபெற்ற இவ்விழாவின் பிரதம அதிதி, மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்.

இப்பத்தி மீடியா போரத்துக்காகவல்ல! அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வுக்காகவே எழுதப்படுகிறது. முதற்கண், அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வுக்கு தரிப்பு 'ஒரு ஷபாஸ்' (ஷா - அப்பாஸ்) கூறிக் கொள்வதுடன் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறது; காரணம் இருக்கிறது.

'சியன' ஊடக அமைப்பின் தலைவரான முன்னாள் முஸ்லிம் சேவைப் பணிப்பாளரும் சிறந்த ஒலிபரப்பாளருமான எம். இஸட். அஹமத் முனவ்வர் அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்விடம் ஒரு மகஜரைக் கையளித்தார். அதனைப் பகிரங்கமாகப் படித்துக் காட்டிவிட்டே கையளித்தார். தங்களின் புதிய ஊடக அமைப்புக்கு சில இலத்திரனியல் உபகரணங்களைக் கொள்வனவு செய்ய வேண்டியிருப்பதாகவும் அதற்கு நாலரை இலட்சம் ரூபாய் வரை தேவைப்படுவதாகவும் அமைச்சர் ஏதாவது உதவி புரிய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அமைச்சரும் உடனடியாகவே ஓர் இலட்சம் ரூபாய் தருவதாகக் கூறிவிட்டு சபையோரின் கரகோசம் ஓயுமுன்னரே முழுப்பணத்தையும் (நான்கரை இலட்சம் ரூபாய்) தானே தருவதாகவும் கூறினார். கரகோசம் வானைப் பிளந்தது. கூறியது மட்டுமல்ல பணக்கட்டு ஒன்றையும் கையளித்தார்.

இத்தகைய மனோநிலை எத்தனை பேருக்கு வரும். இந்த நாட்டில் எத்தனை முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் எத்தனை பேருக்கு கலைஞர், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்களைத் கைதூக்கிவிடும் மனோ நிலை இருக்கிறது. ஆனால் அது அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்விடம் இருக்கிறது.... நிறையவே!

சில வருடங்களுக்கு முன் இந்நாட்டிலுள்ள ஐம்பது கவிஞர்களை காத்தான்குடிக்கு வரவழைத்து மாலை தோரணங்களுடன் வீதி ஊர்வலமாக அழைத்துச் சென்று மகத்தான விருந்தொன்றும் அளித்து, ஒவ்வொரு கவிஞருக்கும் பத்தாயிரம் ரூபாய் வீதம் பொற்கிழியும் வழங்கிக் கௌரவித்த பசிய நினைவுகள் - நெஞ்சகலா நினைவுகளை மறக்கத்தான் முடியுமா?

இத்தகைய நல்ல கைங்கரியத்தைச் செய்து வரும் மற்றொரு அமைச்சரை நான் நன்கறிவேன். மன்னார் மைந்தன், வன்னி எம். பி. அமைச்சர் றிஷாத் தான் அவர். நூல் வெளியீடுகள், கலை நிகழ்ச்சிகளுக்கு அழைத்தால் (கூடியவரை) செல்வார். எழுத்தாளனின் நூலை கனத்த 'என்வெலப்' ஒன்றைக் கொடுத்து பெற்றுக் கொள்வார். அந்த என்வெலப்புக்குள் எவ்வளவு தொகை இருக்கும் என்றும் எனக்குத் தெரியும். எனது நெடுநாள் அநுபவம் இது. அமைச்சர் றிஷாத்தின் முன் மாதிரி பற்றி ஒரு 'பத்தி' கூட எழுதியிருந்தேன்.

இப்பத்தி, அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வுக்கு அர்ப்பணம் செய்யப்படுகிறது. ஏனைய அரசியல் பிரமுகர்கள் தயவு செய்து கோபம் கொள்ள வேண்டாம்! விளம்பரமின்றியும் இலைமறைகாயாகவும் செயல்படும் அரசியல் வாதிகளும் இருக்கலாம். உங்களது சிந்தனைக்கே இதனை விட்டுவிடுகிறேன்.

# அன்புள்ள வாப்பாவுக்கு

அன்புள்ள வாப்பாவுக்கு
அஸ்ஸலாமு அலைக்கும்!

இத்தனை சீக்கிரம்
உங்களின் நிரந்தரப்பிரிவினை
நாங்கள் நினைத்தும் பார்க்கவில்லை!

பெரும் துயரமொன்றை
உங்கள் மரணம்
எங்களுக்குத் தந்துவிட்டது

நாங்கள் எத்தனை அழுதாலும்
நீங்கள் திரும்பி வரமாட்டீர்கள்
என்ற உண்மை தெரிந்தும்
கண்ணீரை கட்டுப்படுத்த முடியவில்லை

ஆலமரமாக நீங்கள்
நிழல் தந்து காத்தீர்கள்
எங்கள் ஆறுதலுக்காகவேனும்
இன்னும் கொஞ்ச நாட்களுக்கு
நீங்கள் உயிர் வாழ்ந்திருக்கலாமே!

ஒவ்வொரு அதிகாலையும்
மகளோடு பேசுவீர்களே
இப்போது மகள் கேட்கிறாள் வாப்பா
அப்பாவோடு பேச வேண்டுமென்று
அந்த மழலைக்கு நான் என்ன
மறுமொழி சொல்வேன் .....

தீராத வலிதனை
தினம் அனுபவிக்க
நான் செய்த பாவமென்ன
தெரியாது வாப்பா ......

மரணம் வலிக்காது என்பதினாலா
"ரணம்" அதனோடு ஒட்டியுள்ளது

இனியுங்கள் முகத்தை
தடவிப்பார்க்கும்
பாக்கியம் எனக்கில்லையே வாப்பா ...

உங்கள் மையத்தின்
ஒளி வீட்டை வெளிச்சமாக்கியது
எங்கள் இதயத்தை
அதன் இருள் தடவி சென்றுவிட்டது!

உங்கள் கப்ரும்
எங்களிடம் இல்லை வாப்பா

உங்களின் கடமையுணர்ச்சி
யாரிடமும் கண்டதில்லை

உங்களின் முன்னால்
போலிச் சாரங்கள்
பொய்த்துப்போயின ...

நோயென்று பாயில் படுக்கவோ
நொந்து போய்
அடைந்து கிடக்கவோ
சேயென்று உங்களை தாங்கவோ
எதுவும் நடக்க வில்லை வாப்பா

மரணம் மட்டுக்கும்
சொந்தக்கால்களினாலேயே
நம்பிக்கையுடன் நடந்தீர்கள்

அல்லாஹ் உங்களை
பொருந்திக்கொள்வானாக
உங்களின் கப்ரை சுவர்க்கத்தின்
வாசனையால் நிரப்புவானாக ....

இறைவன் நாடினால்
மறுமையில் நாம்

-நாச்சியாதீவு பர்வீன் -

# புனித ரமழானே வருக!

மாதமொன்று நோற்றிட
மாமறைதனை ஓதிட
ஏழைகள் பசிப்பிணி உணர்ந்திட
சதக்காக்கள் கொடுத்திட
அன்பளிப்புக்கள் பகிர்ந்திட
உணவின் பரக்கத் கிடைத்திட
உறவுகள் ஒற்றுமை பேணிட
உலகு உயிரோட்டம் பெற்றிட
சமத்துவம் சரியாய்ப் பேணிட
சமாதானம் நிலை நாட்டிட
பாவங்கள் தன்னை கழுவிட
பாவமன்னிப்புத் தேடிட
பக்குவமாக நடந்திட
நன்மைகள் பலவும் புரிந்திட
புத்துயிர் பெற்று எழுந்திட
புத்தாடைகளை அணிந்திட
இனிய ரமழானே நீ வருக!
புனித ரமழானே வருக!!



எஸ்.ஏ. இஸ்மத் பாத்திமா
அதிபர்
முஸ்லிம் பாலிகா வித்தியாலயம்
கஹட்டோவிட்ட







# பொறுமையை சோதிக்கும் நல்லாட்சி அரசு






**ஏ.எஸ்.எம். ஜாவித்**

முஸ்லிம்களுக்கெதிராக பொதுபலசேனா மற்றும் சிங்கள பௌத்த இனவாத அமைப்புகள் கட்டவிழ்த்துவிட்டுள்ள வன்செயல்கள் நாளாந்தம் அதிகரித்து வருவதோடு, நாட்டில் சட்டம், ஒழுங்கு, நீதி இல்லாதொழிக்கப்பட்டு, நல்லாட்சி அரசில் முஸ்லிம்கள் நம்பிக்கையிழக்கும் நிலையேற்பட்டுள்ளது.

கடந்த 10 நாட்களில் முஸ்லிம்களுக்கெதிராக சிங்கள, பௌத்த இனவாதிகளின் 20க்கு மேற்பட்ட இனவாத செயற்பாடுகளும் அத்துமீறல்களும் அரங்கேறியுள்ளன. நாட்டின் சட்டமும் ஒழுங்கும் இனவாதிகளை கட்டுப்படுத்துவதற்கான எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளாது மௌனம் காக்கின்றதே என்ற ஆதங்கத்தில் முஸ்லிம்கள் உள்ளனர்.

குருநாகலையில் பொதுபல சேனாவின் வாகன தொடரணியை பொலிஸார் குறுக்கிட்டு நிறுத்தியபோது குருநாகலையைச் சூழவுள்ள முஸ்லிம் பிரதேசங்களில் பதட்ட நிலை ஏற்பட்டது. ஞானசார தேரரின் பயணம் மீண்டுமொரு பிரச்சினையை ஏற்படுத்தும் என்றே பொலிஸார் அவரது பயணத்தை தடுத்து நிறுத்தினர். எனினும் தன்னை கைது செய்யப்போவதாக வதந்தியைப் பரப்பி பதட்ட நிலையை ஏற்படுத்திவிட்டார். தான் கைதுசெய்யப்பட்டால் முஸ்லிம்கள் பாரதூரமான விளைவுகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்றும் மிரட்டியிருந்தார். இந்த சம்பவம் நடந்து சிறிது நேரத்தில் கண்டி- குருநாகலை வீதியில் உள்ள மல்லவபிட்டி ஜும்ஆப் பள்ளிவாசல் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. நள்ளிரவாகும்போது காலி எல்பிட்டி பகுதியில் உள்ள முஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான கடையொன்றையும் எரித்து நாசமாக்கினர். இன்னும் பல உடைமைகளையும் இனந்தெரியாத இனவாதிகள் சேதமாக்கி அடாவடித்தனம் செய்துவருகின்றனர்.

இந்த நாட்டில் அமைதியையும், சமாதானத்தையும், இன நல்லிணக்கத்தினையும் விரும்புவதாக ஜனாதிபதியும், பிரதமரும் எல்லாக் கூட்டங்களிலும், கலந்துரையாடல்களிலும் இந்த நாட்டு மக்களுக்கு தெரிவித்து வரும் விடயங்கள் இன்று நகைப்புக்கிடமாக இருப்பதுடன் மறுபுறத்தில் சண்டியர்கள் சண்டித்தனத்தை மூலம் அரசுக்கு சவால் விடும் விடயங்களே மேலோங்கி நிற்கின்றன.

குருநாகலை மற்றும் காலி சம்பவங்கள் பொலிஸாருடனும், சட்டத்துறையுடனும் சம்பந்தப்பட்டதாகும். ஆனால் பொதுபல சேனாவின் ஞானசார தேரரின் தூண்டுதலால் குண்டர்கள் முஸ்லிம்களின் பள்ளியை குண்டெறிந்து தாக்கியதுடன் காலி எல்பிட்டியவில் உள்ள முஸ்லிம் வர்த்தகரின் கடையை எரித்து நாசமாக்கியதும் எந்த விதத்தில் நியாயமான விடயங்களாகும்.

உண்மையில் இவர்கள் விடயத்தில் அரசாங்கம் சரியான நடவடிக்கையை இனியும் எடுக்கத்தவறினால் முஸ்லிம் சமூகம் தமது பாதுகாப்புக்கு சர்வதேசத்தை நாட வேண்டி வரும். அதற்காக முழு முயற்சியுடன் செயற்பட வேண்டி வரும் என அரசாங்கத்திற்கும், குண்டர்களுக்கும் எச்சரிக்கை விடுக்கின்றோம்.

இதுவரை காலமும் இந்த நாட்டின் இறைமை, ஜனநாயகம், இன நல்லிணக்கம், அமைதி, சமாதானம் போன்ற விடயங்களில் இந்த நாட்டின் ஆட்சியாளர்களுக்கும், அரசாங்கங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கி ஆட்சியை சிறப்பாக நடத்த உதவினர். இதுவே இலங்கை முஸ்லிம்களின் வரலாறுகளுமாகும். இவ்வாறு முஸ்லிம் சமூகம் இன்று வரை பொறுமைக்குமேல் பொறுமை காத்து அமைதியாகவே இருந்து வருகின்றனர்.

இவ்வாறு பொறுமை காக்கும் ஒரு சமூகத்தினை பொறுமையை இழக்க வைக்கும் விடயம் மிக மோசமாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடிக்க அடிக்க அம்மியும் நகருமாம் என்பதற்கு ஒப்பாக முஸ்லிம் சமூகமும் பொறுமை இழந்து தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், எதிரிகளை தாக்கவும் போராட்டப் பாதையில் இறங்க வேண்டிய ஒரு சந்தர்ப்பத்தையே பொதுபல சேனாவின் ஞானசார தேரர் அவரின் அடாவடித் தனங்கள் மூலம் வெளிப்படுத்துகின்றார். அத்துடன் அரசும் இவர் விடயத்தில் இனியும் சட்ட நடவடிக்கை எடுக்கத்தவறின் அது பாரிய பின்விளைவுகளையே கொண்டு வந்த சேர்க்கும் என முஸ்லிம் மார்க்க அறிஞர்கள் அரசுக்கு விசனம் தெரிவிக்கின்றனர்.

குற்றமிழைத்தவனுக்கு சட்டம் தனது கடமையைச் சரியாகச் செய்ய வேண்டும். ஒரு முறை செய்தால்சரி பரவாயில்லை என்று இருந்தால் அது சண்டித்தனமாக தொடராக சட்டத்துறைக்கும், பொலிஸாருக்கும் சவால் விடும் வகையில் முஸ்லிம்களை அழித்தொழிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டே வருகின்றன. ஞானசார தேரர் முஸ்லிம்களைப் பொறுத்தவரை ஒரு கொலைக் குற்றவாளி அவர் மஹிந்த அரசில் அளுத்கம, தர்ஹா நகர் போன்ற பகுதிகளில் காட்டிய கொலைக் கலாச்சாரம் முஸ்லிம் சமூகத்திலிருந்து இன்று வரை அகல வில்லை.

இவ்வாறான ஒருவர் தொடர்பாக அவர் மீது தொடராக குற்றஞ் சுமத்தி வரும் நிலையில் அதையெல்லாம் அவர் கணக்கெடுக்காமல் மீண்டும் மீண்டும் பாரிய குற்றங்களை செய்வதனை ஏன் அரசாங்கம் கண்டு கொள்ள வில்லை என மக்கள் கேட்கின்றனர். 99 சதவீதமான மக்கள் எதிர்க்கும் ஒரு குழுவை அல்லது நபரை அரசு ஏன் கைது செய்யாது விளையாடுகின்றது என்ற விடயத்தில் இந்த நாட்டு மக்களுக்கு பாரிய சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

இன்று இடம் பெறும் மேற்படி செயற்பாடுகள் மற்றுமொரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான எதிர்வு கூறலாகவே நோக்க வேண்டியுள்ளது. ஞானசாரரின் காட்டுத்தர்பாரின் விளைவே மன்னராக இருந்த மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியை இழந்து வீடு செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. இவ்வாறான விடயங்கள் வெளிப்படையாக இருக்கையில் ஜனாதிபதி மைத்திரியும், பிரதமர் ரணிலும் இது விடயத்தில் கண்டு கொள்ளாது இருப்பது புரியாத புதிராகவே இருக்கின்றது என புத்திஜீவிகள் கவலை வெளியிடுகின்றனர்.

கடந்த பல வருடங்களாக பொதுபல சேனாவும், ஞானசார தேரரும், ராவண பலயவும் பல நூற்றுக்கணக்கான குற்றங்களையும், துரோகங்களையும் செய்துள்ளனர் என்பது தொடர்பாக தகுந்த ஆதாரங்களுடன் பொலிசில் முறையிட்டதுடன் அரசாங்கத்திற்கும் தெரிவித்து இது வரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லை. இந்த நாட்டில் மத நிந்தனை செய்யக் கூடாது என்று அரசு அறிவித்து சட்டங்களையும் கொண்டு வந்த போதிலும் அவையனைத்தும் முஸ்லிம்களைப் பொறுத்தவரை எழுத்து வடிவம் மட்டுமேயாகும்.

உண்மையான ஜனநாயக நாடாக இருந்தால் ஜனாதிபதி ஞானசார தேரின் அடாவடித் தனங்களுக்கு தகுந்த பாடம் புகட்டியிருக்கலாம். ஆனால் இன்றைய நிலையில் ஜனநாயகம் உயிரற்று சண்டித்தனம் தலைதூக்கியுள்ளதையே காட்டி நிற்கின்றது. சிறுபான்மை மக்கள் என்ற வகையில் காவி உடைக்கு அடிபணிந்து முஸ்லிம்களுக்கு துரோகமிழைக்கும் ஒரு செயற்பாடாகவே இன்றைய சம்பவங்கள் காட்டி நிற்கின்றன.

இலங்கையில் மீண்டுமொரு இனக்கலவரத்தை ஏற்படுத்தி இந்த நாட்டில் பாரிய இரத்த ஆறு ஓடுவதற்கான விடயத்தில் ஞானசார தேரர் சண்டியர்களுடன் அலைந்து திரிவது வெளிப்படையாகவே காணக் கூடியதாகவுள்ளதால் இது விடயத்தில் சமாதான விரும்பிகள் தமது கடுமையான கண்டனங்களை வெளியிட்டு அவர்களின் தண்டனையை உறுதி செய்ய வேண்டியுள்ளது. இல்லாவிட்டால் அது இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜைகளினதும் அழிவிற்கான ஒன்றாகவே அமையும்.

சமயத்தலங்கள் மீதான தாக்குதல்கள் கண்டிக்கத்தக்கது என்றும் கடந்த ஒருவார காலப்பகுதியில் 3 பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசப் தெரிவித்துள்ளார்.

சனியன்று இரவு மல்லவப்பிட்டி பள்ளிவாசல் மீது பெற்றோல் குண்டு வீசப்பட்டதனையடுத்து அமெரிக்கத் தூதுவர் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் இதனைப் பதிவுசெய்துள்ளார். குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் உடனடியாகக் கைதுசெய்யப்படுவார்கள் என்று தான் நம்புவதாகவும் தனது டுவிட்டர் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனவே முஸ்லிம் சமூகம் சர்வதேசம் சென்று இந்த நாட்டின் இறைமை, ஜனநாயகம் அழிந்து விட்டது எமக்குப் பாதுகாப்புத் தாருங்கள் என்று சொல்ல முன் ஞானசார தேரர் மீது மத நிந்தனைச் சட்டப்படி கைது செய்து அவருக்கான உச்சகட்டத் தண்டனையை வழங்கி இந்த நாட்டு முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.




## பட்டதாரியாகவும், அட்வகேட்டாகவும் விளங்கிய முதல் இலங்கை முஸ்லிம் எம். சீ. அப்துல் காதர்



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்த்தகரான முகம்மது கரீமின் மகனாக எம். சீ. அப்துல்காதர் பிறந்தார். அப்துல் கரீம் பழைமையான கருத்துக்களை உடையவராகவும் மேல்தட்டுக்கல்வி இஸ்லாமிய வாழ்க்கை நெறிக்கு முரணாக அமையுமெனவும் கருதி தனது மகனைப் பாடசாலைக்கு அனுப்புவது பற்றிச் சிந்திக்கும்போது இதற்கு மாறான கருத்தைக் கொண்டிருந்த அவரது மனைவி தனது புதல்வன் அப்துல் காதரை யாழ்ப்பாண புதுச்செட்டித்தெரு உயர் பாடசாலைக்கு ஆரம்பக்கல்வி பெற அனுப்பினார்.

படிப்பில் திறமைகாட்டிய அப்துல்காதரை அவரது ஆசிரியர்கள் உற்சாகப்படுத்தியதுடன் இலங்கையில் நடந்த சென்னை பிரசிடென்சி மெட்ரிக்குலேசன் பரீட்சையில் சித்தியடைந்தமையால் பல்கலைக்கழகத்தில் சேர்வதற்கு புலமைப்பரிசிலொன்றையும் பெற்றுக் கொடுத்தனர்.

சென்னை பிரசிடென்சி கல்லூரியில் பட்டப்படிப்பைப் பெற்று இலங்கை திரும்பிய அப்துல்காதர், நாடு திரும்பி தான் கற்ற கல்லூரியில் சிறிது காலம் கணிதம் கற்பித்தார். சட்டத்துறை அவரை ஈர்த்ததால் அத்துறையில் தேர்ச்சிபெற்று இலங்கையின் உயர்நீதிமன்ற அட்வகேட்டாகத் தேறினார்.

1904 ஒக்டோபர் 7 இல் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் மேற்கத்திய உடையில் சிரசில் துருக்கித் தொப்பி அணிந்து சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். பட்டதாரியாகவும், அட்வகேட்டாகவும் விளங்கிய முதல்சோனகர் என்ற பெருமை எம். சீ. அப்துல்காதருக்குரியதாகும்.

1905 மே 2இல் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நீதியரசர் சேர். சீ.பீ. லயாட் முன்னிலையில் மேன்முறையீட்டு வழக்கொன்றில் வாதாட ஆஜராக வேண்டிய சந்தர்ப்பம் எம். சீ. அப்துல்காதருக்கு ஏற்பட்டது. அங்கே அப்துல் காதருக்கு ஓர் அதிர்ச்சியான சம்பவம் நிகழ்ந்தது. நீதிமன்றத்துக்கு மரியாதை காட்டும்முகமாக அவர் அணிந்து சென்ற துருக்கித் தொப்பியையும் சப்பாத்துக்களையும் கழற்ற வேண்டுமென நீதியரசர் லயாட் உத்தரவிட்டார்.

உறுதியான உள்ளம் கொண்ட எம். சீ. அப்துல் காதர் இவ்விரண்டு செயல்களையும் மறுத்துரைத்தார்.துருக்கித்தொப்பி அணிந்து வருவது நீதிமன்றத்துக்கு மரியாதை செய்வதற்கென்றும் சப்பாத்தைக் கழற்றுவது முடியாத விஷயமென்றும் கூறி நீதிமன்றத்தைவிட்டு வெளியேறினார். ஆணையை ஏற்க மறுத்தாராயினும் பின்னர் தான் ஒரு சட்டவறிஞர் என்ற வகையில் நீதியரசரை அவரது அறையில் சந்தித்து நிலைமையை விளக்கியும் பயன்கிட்டவில்லை.

இதன்மூலம் தன் சமூகத்தின் மரபுரிமையைக் காப்பது தமது தொழிலைவிட சிறந்தது என்பதை உலகிற்கு உணர்த்துவது கடமையெனக் கருதினார். தனது தொழிலுக்கு ஏற்படக் கூடிய ஆபத்தைப் பொருட்படுத்தவில்லை. இவரது நடவடிக்கைகள் வெள்ளைக்கார நீதியரசரின் நடவடிக்கை சம்பந்தமாக பொது மக்களின் எதிர்ப்பைத் தூண்டுவதாக அமைந்தது. அத்துடன் அது மந்தநிலையில் செயற்பட்ட சமுதாயத்தைத் தூண்டுவதாகவும் அமைந்தது. இதற்கான போராட்டத்திற்கு அப்போது சோனக சங்கத்தின் தலைவராக இருந்த ஐ. எல்.எம். அப்துல் அஸீஸ் தலைமை தாங்கினார். சோனகரின் தூது கோஷ்டியொன்று நீதியரசர் லயாடைச் சந்தித்தது.

நீதியரசர் தனக்கே உரித்தான ஏகாதி பத்தியப் போக்கில் இதுபற்றிக் கதைக்கவிரும்பவில்லை. எனினும் தனிப்பட்ட முறையில் கதைக்க விரும்பியதால் 1905 ஜூலை 17இல் அவரது டொரிங்டன் ஹவுஸில் சந்தித்து தூதுக்கோஷ்டியின் கருத்தைக் கேட்டார். முஸ்லிம் சமூகத்தின் மரபுரிமையைப் பாதிக்கும் அவரது கட்டளையை மாற்றாவிட்டால் எதிர்காலத்தில் பாரதூரமான நிகழ்வுகள் ஏற்படலாம் என அப்துல்காதர் விளக்கினார்.

அவர்களது கோரிக்கையை எழுத்தில் சமர்ப்பிக்குமாறு நீதியரசர் கேட்டுக் கொண்டார். அப்துல்காதர் உயர் நீதிமன்றத்துக்கு மகஜரொன்றைச் சமர்ப்பித்தார். எனினும் தனது கட்டளையை காப்பாற்றிக் கொள்ள நீதியரசர் லயாட் முயற்சித்ததனால் துருக்கித் தொப்பி அணிந்து நீதிமன்றம் வருவதைத் தடைசெய்து 1905 செப்டம்பர் 19இல் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இச்சந்தர்ப்பத்தில் முஸ்லிம் சமுதாயம் கூட்டாக இணைந்து இத்தீர்ப்பை எதிர்த்து உயர்மட்ட நிலையில் நடவடிக்கை மேற்கொள்ள ஒரு குழுவை நியமித்தது. ஐ. எல்.எம். அப்துல்அஸீஸ் தலைமையில் இக்குழுவில் 21 முக்கிய முஸ்லிம் தலைவர்கள் இடம்பெற்றனர். உடையில் முஸ்லிம்களின் மரபுரிமையை மறுக்கும் இத்தீர்ப்புக்கெதிராக முஸ்லிமல்லாதோரும் இணைந்து கொண்டனர்.

போராபெருமகன் கரீம்ஜீ ஜபர்ஜீயின் ஆலோசனைப்படி இந்தியாவில் புகழ்பெற்ற இந்திய முஸ்லிம் பரிஸ்டர் மௌலவி றபியுதீன் அகமது வரவழைக்கப்பட்டு சேர். ராஸிக் பரீதின் தந்தையான டபிள்யூ. எம். அப்துல் றஹ்மானின் தலைமையில் 1905.12.31இல் மருதானைப்பள்ளி முற்றவெளியில் மாபெரும் கூட்டம் கூட்டப்பட்டது. பிரித்தானிய நீதிமுறையின் நியாயத்தை பல உதாரணங்கள் மூலம் மிக உருக்கமாக மௌலவி றபியுதீன் அகமது எடுத்துக் கூறி நீதிபதி லயாட்டின் கட்டளை பிரித்தானிய பரிபாலன முறைக்கு மாற்றமானது. இதுபற்றி பிரித்தானிய அரசுக்கு எடுத்துக் கூற வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது.

இதன்பின் சட்டவறிஞர்களின் மரபங்கியுடன் முஹம்மதிய சட்டஅறிஞர்கள் துருக்கித்தொப்பியணிந்து நீதிமன்றத்தில் ஆஜராக முடியுமென குடியேற்ற செயலாளர் துருக்கித் தொப்பிக் குழுவுக்கு அறிவித்தார்.இலங்கையில் பிரித்தானிய பேரரசின் ஆட்சி நிலவிய காலத்தில் பிரித்தானிய நீதியரசரொருவரின் ஆணையை ஏற்காமல் இலங்கை முஸ்லிம்களின் மரபுரிமையைக் காத்தபெருமை எம். சீ. அப்துல் காதரைச் சாரும். எம். சீ. அப்துல்காதர் ஓர் அட்வகேட் மட்டுமல்ல. முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர். கொழும்பு மருதானை ஸாஹிராவின் முகாமைத்துவப்பதவியை சிலகாலம் வகித்தார்.

தனது காத்தான்குடி நண்பர் புரக்டர் ஏ.எம். சரீபுவின் வேண்டுகோளுக்கு இணங்கி மட்டக்களப்பு நீதிமன்றத்தில் தொழில்பயிற்சி புரிவதற்காக காத்தான்குடியில் குடியேறினார். அரசியல் துறையிலும் ஆர்வங்கொண்ட எம். சீ. அப்துல்காதர், இலங்கையின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கு லண்டனிலுள்ள குடியேற்ற நாட்டு அலுவலகத்திற்குச் சென்ற முஸ்லிம் தூது கோஷ்டியில் அங்கம் வகித்தார். முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் அப்துல்காதர் அங்கம் வகித்த ஒரு குழுவின் சிபாரிசின் அடிப்படையிலேயே நிறைவேற்றப்பட்டது. இவர், முதற்காழியார் சபையிலும் அங்கம் வகித்ததுடன் மட்டக்களப்பு முதல் நகரசபையின் உறுப்பினராகவும் கடமையாற்றினார்.

பயபக்தியிக்க முஸ்லிமாக இருந்த எம். சீ. அப்துல்காதர் அத்தனை கடமைகளுக்கும் மத்தியில் ஐங்காலத்தொழுகையை தவறாது நிறைவேற்றும் வழக்கத்தைக் கொண்டவர். தனது மௌத்துடைய நேரம் வரும்வரை தொழுகையில் பேணுதலாக இருந்த இவர், 1964 மே 21இல் காலமானார். எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாரது கப்ரை ஒளிமயமாக்கி, அவருக்கு சுவர்க்கத்தை வழங்குவானாக!

# சட்டத்தை அமுல்படுத்த முடியாது அரசாங்கம் இனவாதத்திற்கு பணிந்து நிற்கிறது

## மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ். சுபைர்




(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

சிறுபான்மையினருக்கெதிரான அட்டகாசங்கள் தலை விரித்தாடுகின்றபோது சட்டத்தை அமுல்படுத்த முடியாத அரசாங்கம் இனவாதத்திற்குப் பணிந்து கைகட்டி நிற்கிறது என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ். சுபைர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, ஏறாவூர் நகர பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் ஏறாவூர் நகர பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நகர பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மத் ஹனீபா தலைமையில் இடம்பெற்றது.அங்கு மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவர்களில் ஒருவரான சுபைர் தொடர்ந்தும் பேசுகையில்,

நல்லாட்சி அரசாங்கத்தின் ஆளுகையின் கீழ் தற்போது ஒரு அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இனங்களுக்கு மத்தியிலே முறுகலை ஏற்படுத்திக் கொண்டு திரியும் நாசகாரக் கும்பல்களைக் கைது செய்து நாட்டின் உயர் மதிப்பு மிக்க சட்டங்களை அமுல்படுத்த முடியாத கையறு நிலையில் ஆளும் தரப்பு உள்ளது. இந்த நிலைமை நாட்டிலுள்ள சிறுபான்மை இனங்கள் மத்தியில் ஒரு வித அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது.நாட்டின் அதியுயர் பொறுப்பிலுள்ள ஜனாதிபதி எந்தத் தீர்மானத்தையும் எடுக்காமல் கைகட்டிப் பார்த்திருக்கும் நிலையை சிறுபான்மை மக்கள் ஒரு வித ஆதங்கத்தோடு அவதானித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

எந்தக் கோணத்தில் இந்த நிலைமையை உற்றுக் கவனித்தாலும் இது இந்த நாட்டுக்கு நல்லதல்ல.நல்லாட்சியின் பங்காளிகள் இந்த விடயத்திலே தவறிழைத்து விட்டதாகவே மக்கள் அபிப்பிராயப்படுகின்றார்கள். இந்த அவநம்பிக்கை கலந்த சூழ்நிலை நீடிக்குமானால் எதிர்காலத்தில் இந்த நாடு அழிவுப் பாதையைத் தானாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டதாகவே அமையும். யுத்தத்திற்குப் பின்னர் எதிர்பார்த்த எந்த நல்ல மாற்றத்திற்கும் நாட்டில் தற்போது மேலெழுந்துள்ள இனவாதப் போக்கும் அதனை மறைமுகமாக அங்கீகரித்து அகமகிழ்கின்ற ஆட்சியாளர்களின் போக்கும் இந்த நாட்டை மீண்டும் அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லும் என்ற எச்சரிக்கை மணியாகவே மக்களின் அபிப்பிராயம் அமைந்துள்ளது. ஒட்டு மொத்த நாட்டின் நிலை அவ்வாறிருந்தாலும் பிரதேச ரீதியாக எழுகின்ற இன முறுகல்களைத் தணித்து இன ஒற்றுமைக்கு வித்தை தூவுகின்ற நல்ல காரியங்களை அதிகாரிகள் செய்ய வேண்டும்.இந்தக் கடமையை அதிகாரிகள் செய்து முடித்தால் குறைந்தபட்சம் அதுவாயினும் ஏக்கப் பெருமூச்சோடும் அச்சத்தோடும் காலங் கழிக்கும் சிறுபான்மை மக்களுக்கு ஒரு ஆறுதலாகவும் நம்பிக்கைத் துளியாகவும் இருக்கும்.பொலிஸாரும் பிரதேசங்களில் ஏற்படுத்தப்படுகின்ற இன முறுகல்களை உடனடியாக கட்டுக்குள் கொண்டு வருகின்ற கைங்கரியங்களைச் செய்வதற்கு தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.என்றார். கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்திக் குழு இணைத் தலைவர்களில் ஒருவருமான அலிஸாஹிர் மௌலானா உட்பட அரச கூட்டுத்தாபன, திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலக அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். பிரதேசத்தில் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் பின்னடைவுகள் மற்றும் எதிர்காலத்தில் அமுலாக்கவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய அறிமுகமும் அனுமதிகளும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

# முஸ்லிம் காங்கிரஸின் இரு நூல்கள் வெளியீடு



(பிறவ்ஸ்)

இஸ்லாமிய தமிழ் இலக்கிய பொன் விழா 'நினைவுமலர்', மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாதாந்த சஞ்சிகையான 'சாட்சியம்' ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா 24ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4:15 மணிக்கு நடைபெறவுள்ளது.

கொழும்பு கோல் மண்டலத்துக்கு முன்னால் அமைந்துள்ள மேல் மாகாண அழகியல் கலையரங்க கேட்போர் கூடத்தில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது. அன்றையதினம் இரு நூல்களும் ஒளி, ஒலி வடிவில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளன.

பேராதனை பல்கலைக்கழக ஓய்வு பெற்ற முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி எம்.எஸ்.எம். அனஸ் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறை தலைவர் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் ஆகியோர் இஸ்லாமிய தமிழ் இலக்கிய பொன் விழா குறித்து சிறப்புரையாற்றவுள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செய்து வருகின்ற அபிவிருத்திகள் உள்ளடங்கிய செயற்பாடுகளை தொகுத்து வழங்கும் 'சாட்சியம்' எனும் மாதாந்த சஞ்சிகையும் அன்றையதினம் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. அத்துடன் மீள வடிவமைக்கப் பட்ட கட்சியின் உத்தியோகபூர்வ இணையத்தளமும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் பிரதிநிதிகள், உயர்பீட உறுப்பினர்கள், இலக்கியவாதிகள், சமூக ஆர்வலர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# வடக்கில் மாபெரும் சுகாதார கண்காட்சி




(அஷ்ரப் ஏ சமத்)

சுகாதார பிரதி அமைச்சர் பைசால் காசிம் வடக்கின் மாபெரும் சுகாதார கண்காட்சியினை (MEDEXPO) யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் ஆரம்பித்து வைத்தார்.

இவ் நிகழ்விற்கு பிரதம அதிதியாக சுகாதார பிரதி அமைச்சர் பைசால் காசிம் கலந்து கொண்டதுடன் வடக்கு மாகாண சுகாதார உயர் அதிகாரிகளும் வேம்படி மகளிர் கல்லூரியின் அதிபரும், வடக்கு மாகாண கல்வி திணைக்கள உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இக் கண்காட்சி மே மாதம் 19.-21 ஆகிய 3 நாட்களுக்கு நடைபெற்றன, இக் கண்காட்சியில் இந்திய நாட்டின் சிறந்த வைத்திய குழுக்கள் பங்குபற்றினார்கள்.



தெமட்டகொடை யுனைட்டட் விளையாட்டு கழகம் ஏற்பாடு செய்திருந்த 17ஆவது வருட மீலாது நபி பரிசளிப்பு நிகழ்வு கொழும்பு 10, அல்-ஹிதாயா மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் மாணவியொருவருக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்குவதையும் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்ட மேல்மாகாண சபை உறுப்பினர் மொஹம்மட் பாயில், சுயாதீன தொலைக்காட்சி சேவையின் முன்னாள் பணிப்பாளர் புரவலர் ஹாசிம் உமர் மற்றும் யுனைட்டட் விளையாட்டுக்கழகத்தின் பொதுச் செயலாளர் எம்.இஸட். எம்.ஸபர் ஆகியோர் உடன் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்-ஏ.எஸ்.எம்.இர்ஷாத்)

# புறா வளர்ப்பு நிலையை உருவாக்குவதில் இலங்கையின் வேகப்புறா வளர்ப்போர் சங்கம் முக்கிய பங்காற்றுகிறது




(குருநாகல் இக்பால் அலி)

உலக நாடுகளைப் போன்று இலங்கையிலும் புறா வளர்ப்பு நிலையை உருவாக்கி போட்டிகளை நடத்துவதில் இலங்கையின் வேகப் புறா வளர்ப்போர் சங்கம் முக்கிய பங்காற்றி வருகின்றது என்று சங்கத்தின் தலைவர் எம். எச். எம். அஜ்மீர் தெரிவித்தார்

இலங்கையின் வேகப் புறாக்கள் வளர்ப்போர் சங்கத்தின் ஏற்பாட்டில் திருகோணமலையிலிருந்து கண்டிக்கு தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட புறாப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் அக்குரணை அரபா மண்டபத்தில் (21) சங்கத்தின் தலைவர் எம். எச். எம். அஜ்மீர் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் போது தலைமையுரையாற்றும் போதே அஜ்மீர் இவ்வாறு இதனைத் தெரிவித்தார்

இந்தப் போட்டி கடந்த 13 ஆம் திகதி திருகோணமலை நகர மைதானத்தில் வைத்து கண்டிக்குச் செல்ல பறக்க விடப்பட்டது. இதில் 200 புறாக்கள் பங்கு கொண்டன. இந்தப் போட்டியில் பங்கு பற்றிய 30 புறாக்கள் வானில் வைத்து கழுகு பிடித்தல் அல்லது ஞாபகத் திறன் மறதி, வேறு இடங்களுக்குச் சென்றதன் காரணமாக தொலைந்துள்ளன. ஆனாலும் அதில் 170 புறாக்களே தத்தமது வளர்ப்பிடத்தை வந்தடைந்தன. தூரம் மற்றும் மணித்தியால வேகக் கணிப்பீட்டின்படியே புறாப் போட்டியாளர்களுக்கான பரிசில் வழங்கி வைக்கப்பட்டது. இதில் எம். எஸ். எம். சப்ரானின் புறா 2 மணித்தியாலம் 27 நிமிடம் 03 செக்கனில் பறந்து வந்து முதலாமிடத்தையும் எம். இஸட் எம். நாசிக்கின் புறா 2 மணித்தியாலம் 27 நிமிடம் 44 செக்கனில் இரண்டாம் இடத்தையும் எம். டி. எம். இல்மாவிலின் புறா மூன்றாடம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

இந்தப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற புறப்போட்டியாளருக்கு ரூபா 75000.00 இரண்டாம் இடத்தைப் பெற்ற புறாப் போட்டியாளருக்கு ரூபா 50000.00 மூன்றாம் இடத்தைப் பெற்ற புறாப் போட்டியாளர்களுக்கு ரூபா 30000.00 பத்துக் உட்பட்ட அனைவருக்கும் ரூபா 10000.00 சான்றிதழும் விருது, பணப்பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டன. இதில் விசேட அம்சமாக வெற்றி பெற்ற போட்டியாளர்கள் பெற்றுக் கொண்ட பணத்தை நோன்பு காலத்தில் வறிய குடும்பங்களுக்கு உதவும் வகையில் பணத்தை மீளவும் புறா வளர்ப்போர் சங்கத்திடம் ஒப்படைத்தனர்.

இந்நிகழ்வில் சங்கத்தின் செயலாளர் எம். ஏ. எம் சப்ரீன் உள்ளிட்ட பல புறா வளர்ப்பு போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

# இலங்கையர் என்றஅடிப்படையில் நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

## திருமலை அரசாங்க அதிபர் என்.ஏ.ஏ.புஸ்பகுமார

(திருகோணமலை சமீன்)

இன, மத வேறுபாடுகளை விடுத்து நாட்டை முன்னிலைப்படுத்தி இலங்கையர் என்றடிப்படையில் அனைவரும் செயற்படும் போது நாடு சகல துறைகளிலும் முன்னேற்றமடையுமென்று திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் என்.ஏ.ஏ.புஸ்பகுமார நேற்று மாவட்ட செயலக வளாகத்தில் நடைபெற்ற இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் குடியரசு தின நிகழ்வின் போது தெரிவித்தார். சுதந்திரத்திற்கு முன்னர் எமது தலைவர்கள் இலங்கையர் என்றடிப்படையில் இணைந்து செயற்பட்டார்கள். உண்மையான சுதந்திரம் 1972 ஆம் ஆண்டிலே தான் எமது தாய் நாட்டுக்கு கிடைத்தது. அதற்கு பின்னர் சமூக பொருளாதார கலாசார ரீதியாக எமது நாடு அபிவிருத்தி அடைந்த விதத்தை கண்டு நாம் திருப்தி கொள்ள முடியுமா என்றும் அரச அதிகாரிகளாகிய நாம் அனைவரும் தத்தம் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை செவ்வனே நிறைவேற்றும் போது உரிய இலக்கை நாடு அடையும் என்று இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். அருள்ராசா, மாவட்ட உதவி அரசாங்க அதிபர் என்.பிரதீபன் உட்பட மாவட்ட செயலக அதிகாரிகள் ஏனைய உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டார்கள்.

# வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு புலமைப்பரிசில்



(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

இளம் மாதர் முஸ்லிம் அமைப்பின் ஏற்பாட்டில் மலேசியாவின் டட்டோ ஹுஸைனின் ஞாபகார்த்தமாக பெங்கோகில் தூதுவராக இருக்கும் டட்டோ ஹுஸைனின் புதல்வியான நஸ்றிரா ஹுஸைனினால் வறிய கும்பங்களைச் சேர்ந்த 30 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கி வைக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை (20) தெமட்டகொட வை.எம்.எம்.ஏ. மண்டபத்தில் இளம் மாதர் முஸ்லிம் அமைப்பின் தலைவி பவானா தாஹா தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்விற்கு மலேசியாவின் இலங்கைக்கான தூதரகத்தின் தூதுவர் வார் அப்துல் வார் ஸைஹீட் பிரதம அதிதியாகவும், சிறப்பு அதிதியாக பிரதமரின் பிரதிபிரதான அலுவலர் ரோசி சேனா நாயக்கவும், கௌரவ அதிதிகளாக டாக்டர் அஹமட் ஹரீஸ் டீன், மாதர் அமைப்பின் நலன் விரும்பியுமான காலித் பாறுக் மற்றும் மாதர் அமைப்பின் அங்கத்தவர்கள் உள்ளிட்ட பல பிரமுகர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வில் வரவேற்புரையை தலைவி பவானா தாஹாவும் நன்றியுரையை அமைப்பின் செயலாளர் சுரையா றிஷ்வியும் வழங்கியதுடன் மர்ஹூம் டட்டோ ஹுஸைனுக்காக விஷேட துஆப் பிரார்த்தனையை மௌலவி ஜெலீல் வழங்கினார்.

இதன்போது 30 மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களும், தெமடகொட பாத்திமாவுக்கு சக்கர நாற்காலியும், குர்ஆனைக் கற்கும் மாணவ, மாணவியருக்கு அல்குர் ஆன் பிரதிகளும் வழங்கி வைக்கப்பட்டதுடன் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்ட டாக்டர் அஹமட் ஹரீஸ் டீன் தனது நிதியில் இருந்து இரண்டு மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குவதற்கான நிதியினை இளம் மாதர் முஸ்லிம் அமைப்பின் தலைவி பவானா தாஹாவிடம் கையளித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# ஹிலாரியை காணவில்லை



எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியிலுள்ள ஹிலாரி முனை சரிந்துள்ளதாகவும், இனிவரும் காலங்களில் மலையேற்ற வீரர்களுக்கு இது ஆபத்தாக இருக்கும் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உலகின் மிக உயரமான சிகரமாக கருதப்படும் இமய மலையிலுள்ள எவரெஸ்ட் சிகரம் நேபாளத்தில் இருக்கிறது. உலகம் முழுவதுமுள்ள மலையேறும் வீரர்கள் இந்த சிகரத்தில் ஏறுவதை தங்கள் வாழ்நாள் சாதனையாக எண்ணி வருகின்றனர். இச்சிகரத்தின் உச்சியை அடையும் வழியில் இருக்கக்கூடிய ஹிலாரி முனை சரிந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஹிலாரி முனை அழிந்துவிட்ட செய்தியை பிரிட்டனை சேர்ந்த மலையேறும் வீரரும் மற்றும் பயணக் குழு தலைவருமான டிம் மோஸ்டேல் உறுதிப்படுத்தியுள்ளார். தன்னுடைய பேஸ்புக் பக்கத்தில், ''ஹிலாரி ஸ்டெப் இனி இல்லை, அது அழிந்துவிட்டது'' என்று பதிவிட்டுள்ளார்.

மலையேறும் வீரர்களுக்கு பெரும் சவாலாக இருக்கும் இம்முனை சுமார் 12 மீற்றர் உயரத்திற்கு பாறைகள் உடைய பகுதியாக இருந்து வந்தது. எப்போது இம்முனை சரிந்திருக்கும் என்பது சரிவர தெரியவில்லை. இருப்பினும், கடந்த 2015ஆம் ஆண்டு நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் போது சரிந்திருக்கலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த 1953 ஆம் ஆண்டில் முதன்முறையாக எவரெஸ்ட் சிகரத்தை ஏறிய சர் எட்மண்ட் ஹிலாரியின் நினைவாக இந்த பகுதிக்கு அவருடைய பெயர் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தீவிரவாதத்தை விரட்டியடிக்க முஸ்லிம் நாடுகள் முன்னின்று செயற்பட வேண்டும்

**அமெ. ஜனாதிபதி டிரம்ப் வலியுறுத்து**



தீவிரவாதத்தை விரட்டியடிப்பதில் முஸ்லிம் நாடுகள் முன்னின்று செயற்பட வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தனது முதல் வெளிநாட்டுப் பயணமாக சவூதி சென்றுள்ள அவர், ரியாத்தில், முஸ்லிம் நாடுகளின் 55 பிராந்தியத் தலைவர்கள் கூட்டத்தில் பேசும்போது இந்தக் கருத்தை வலியுறுத்தினார்.

தனது ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் போது, முஸ்லிம் நாடுகளை வெறுப்புக்குள்ளாக்கும் வகையில் பேசிய அவர், தற்போது அவர்களுடன் ஓர் இணக்கமான உறவை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகப் பார்க்கப்படுகிறது.

புதிய அத்தியாயம் துவங்கியிருப்பதாகக் கூறிய அவர், இது மாறுபட்ட மதங்களுக்கிடையிலான போர் அல்ல என்றும், நன்மைக்கும் தீமைக்குமான யுத்தம் என்றும் வர்ணித்தார்.

முஸ்லிம் நாடுகள் தீவிரவாதத்தை விரட்டியடிப்பதில்தான் வளமான எதிர்காலம் அடங்கியிருக்கிறது என்றும், அமெரிக்கா செயற்பட வேண்டும் என காத்திருக்காமல், ஒவ்வொரு நாடும் தங்கள் பங்கை ஆற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார்.

வழக்கமான, ஆத்திரமூட்டும் பேச்சாக இல்லாமல் டிரம்பின் உரை மாறுபட்டிருந்தது. சவூதி அரேபியாவின் முக்கிய எதிரியான ஈரானை கண்டித்ததன் மூலம், பல வளைகுடா முஸ்லிம் தலைவர்களின் மனங்களைக் குளிர வைத்திருக்கிறார்.

முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவைப் போல, மனித உரிமை, ஜனநாயகம் பற்றிப் பேசவில்லை. ஆனால், பெண்களுக்கு எதிரான அடக்குமுறையை டிரம்ப் கண்டித்தார்.

அவரது பேச்சுக்கு அந்தப் பிராந்தியத்தில், சமூக வலைத்தளங்களில் விமர்சனங்களும் வந்துள்ளன.

டிரம்பை ஆதரிக்கும் சவூதி அரேபியாவில், பெண்கள் வாகனம் ஓட்ட முடியாது, வாக்களிக்க உரிமையில்லை என்றும், அவர் எதிரியாக சித்தரிக்கும் ஈரானில் பெண்கள் வாகனம் ஓட்டவும் வாக்களிக்கவும் உரிமை உண்டு என்று கருத்துக்கள் பரவி வருகின்றன.

# புதிய உயிரினத்துக்கு அப்துல் கலாம் பெயர்

சர்வதேச விண்வெளி நிலையத்தின் வடிகட்டிகளில் கண்டுபிடித்துள்ள புதிய உயிரினத்துக்கு நாசாவின் விஞ்ஞானிகள், இந்திய முன்னாள் ஜனாதிபதியுமான மறைந்த டாக்டர் அப்துல் கலாமின் பெயரை சூட்டி கௌரவித்துள்ளனர்.

விண்வெளியில் ஐ.எஸ்.எஸ். என்று அழைக்கப்படுகிற சர்வதேச விண்வெளி நிலையத்தை அமைத்து, பன்னாட்டு விஞ்ஞானிகள் ஆய்வுப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த மிதக்கும் விண்வெளி நிலையம், பூமியிலிருந்து சுமார் 400 கி.மீ. உயரத்தில் அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகிறது.

இந்நிலையில் அந்த சர்வதேச விண்வெளி நிலையத்தின் வடிகட்டிகளில் (பில்ட்டர்களில்) ஒருவிதமான புதிய உயிரினத்தை அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான நாசாவின் முக்கிய ஆய்வுகூடமான 'ஜெட் புரோபல்சன் லேபரட்டரி'யின் ஆராய்ச்சி விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். இந்த புதிய உயிரினம், பாக்டீரியா வடிவத்திலானது. இந்த உயிரினம் பூமியில் காணப்படுவதில்லை. சர்வதேச விண்வெளி நிலையத்தில் மட்டுமே காணப்படுகின்றது என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த உயிரினத்துக்கு நாசாவின் விஞ்ஞானிகள், இந்தியாவின் ஏவுகணை விஞ்ஞானியும், முன்னாள் ஜனாதிபதியுமான மறைந்த டாக்டர் அப்துல் கலாமின் பெயரை சூட்டி கௌரவித்துள்ளனர்.

இந்த உயிரினத்துக்கு அவர்கள் சூட்டியுள்ள பெயர் 'சொலிபாசில்லஸ் கலாமி' என்பதாகும்.

அப்துல் கலாம் 1963ஆம் ஆண்டு, நாசாவில் பயிற்சி பெற்றார். அங்கு பயிற்சி பெற்று வந்த பின்னர்தான் அவர் நாட்டின் முதல் ரொக்கெட் ஏவுதளத்தை உருவாக்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சவூதியை ஏமாற்றி 48 ஆயிரம் கோடி டொலர்களை கறந்து விட்டார் டிரம்ப்

**ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் பாய்ச்சல்**

அரசுமுறைப் பயணமாக சவூதி அரேபியாவுக்கு சென்ற அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அந்நாட்டு அரசை ஏமாற்றி 48 ஆயிரம் கோடி அமெரிக்க டொலர்களை கறந்து விட்டதாக ஈரான் அமைச்சர் ஒருவர் குற்றம்சாட்டியுள்ளார்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக கடந்த ஜனவரி மாதம் டிரம்ப் பதவியேற்று கொண்டார். அவருக்கு பல நாடுகளை சேர்ந்த பிரதமர்களும், ஜனாதிபதிகளும் தொலைபேசி மூலம் வாழ்த்து தெரிவித்து இருந்தனர்.

அப்போது தங்கள் நாட்டுக்கு வருகை தருமாறு அன்பழைப்பும் விடுத்திருந்தனர். இதனை ஏற்று முதன்முறை வெளிநாட்டு பயணமாக டிரம்ப் சவூதி அரேபியா தலைநகரான ரியாத் நகரை வந்தடைந்தார்.

சவூதி மன்னர், இளவரசர்கள் மற்றும் அந்நாட்டின் அமைச்சர்களை சந்தித்து அமெரிக்கா, சவூதி அரேபியா இடையிலான நல்லுறவுகளை பலப்படுத்துவது தொடர்பாக டிரம்ப் ஆலோசனை நடத்தினார்.

அப்போது இரு நாடுகளுக்குமிடையே பல்வேறு துறைகளில் மிகப்பெரிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. குறிப்பாக அமெரிக்காவிடமிருந்து சுமார் 70 ஆயிரம் கோடி ருபா அளவுக்கு இராணுவ தளபாடங்களை வாங்க சவூதி அரேபியா ஒப்பந்தம் செய்துள்ளது.



பின்னர், அந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்று பேசிய டிரம்ப் தீவிரவாதத்திற்கு எதிராக முஸ்லிம்கள் ஒன்றிணைய வேண்டும் என பேசினார். தீவிரவாதத்திற்கு எதிராக நடக்கும் போரில் அமெரிக்காவுக்கு ஆதரவாக அனைத்து இஸ்லாமிய நாடுகளும் கைகோர்க்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், அமெரிக்கா மற்றும் சவூதி அரேபியாவின் எதிரி நாடான ஈரான் அரசு, அரசுமுறைப் பயணமாக சவூதிக்கு சென்ற அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் அந்நாட்டு அரசை ஏமாற்றி 48 ஆயிரம் கோடி அமெரிக்க டொலர்களை கறந்து விட்டதாக குற்றம்சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக, ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சர் முஹம்மது ஜாவத் ஸரிப் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்

''ஜனநாயகம் மற்றும் நவீனமயம் என்ற பெயரில் சவூதி அரசை ஏமாற்றி 48 ஆயிரம் கோடி டொலர்களை அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் கறந்து விட்டார்'' என்று குற்றம்சாட்டியுள்ளார்.

ஈரான் ஜனாதிபதி பதவிக்கு சமீபத்தில் நடைபெற்ற தேர்தலில் அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி தொடர்ந்து இரண்டாவது முறை வெற்றிபெற்று ஆட்சியை பிடித்த பின்னர் டிரம்ப் சவூதிக்கு சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத குடியேறிகளை வெளியேற்றும் அவுஸ்திரேலியா



அவுஸ்திரேலியாவில் சட்டவிரோதமாக தங்கியுள்ள சுமார் 7500 அகதிகளை வெளியேற்ற முடிவு செய்துள்ளதாக அந்நாட்டு குடியுரிமை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில், இலங்கை, மியன்மார், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளை சேர்ந்தவர்கள் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர். முறையான காரணங்கள் இல்லாமல் சிலர் தங்கியிருப்பதாகவும், இவர்களால் அரசுக்கு பெரும் நிதிச்சுமை ஏற்படுவதாகவும் பல்வேறு கட்சியினர் குற்றம் சாட்டி வந்தனர்.

இந்நிலையில், அகதிகளாக பதிவு செய்வதற்கு போலியான காரணங்களை அளித்து சட்டவிரோதமாக அங்கு தங்கியிருக்கும் சுமார் 7500 பேரை நாட்டை விட்டு வெளியேற்ற முடிவெடுத்துள்ளதாக அந்நாட்டு குடியுரிமை அமைச்சர் பீட்டர் டட்டன் தெரிவித்துள்ளார்.

2013ஆம் ஆண்டுக்கு முன்னர் ஐந்தாண்டு காலத்தில் வந்த சுமார் 50,000 பேரில், 20,000 பேருக்கு அப்போதைய தொழிலாளர் கட்சி அரசு புகலிடமளிக்க முடிவு செய்தது. மேலும் 30,000 பேரின் நிலை குறித்து ஐயம் எழுப்பியிருந்தது.

இந்நிலையில், அவர்களில் சுமார் 7,500 பேர் முறையான காரணம் இல்லாமல் அகதிகள் அந்தஸ்து பெற முயல்வதாகத் தெரியவந்துள்ளதால் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்

# லொறி மீது மோதிய விமானம்: 8 பேர் காயம்



அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகர விமான நிலையத்தில் தரையிறங்கிய ஜெட் ரக விமானம், லொறி மீது மோதிய விபத்தில் 8 பேர் காயமடைந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மெக்சிகோவுக்கு சொந்தமான ஏரோமெக்சிகோ நிறுவனத்தின் போயிங் 737 ரக ஜெட் விமானம் சுமார் 150 பயணிகளுடன் மெக்சிகோ நகரிலிருந்து லொஸ் ஏஞ்சல்ஸ் நகருக்கு புறப்பட்டு வந்தது. அமெரிக்க நேரப்படி பிற்பகல் இரண்டரை மணியளவில் லொஸ் ஏஞ்சல்ஸிலுள்ள சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியது.

ஓடுபாதையை கடந்து பயணிகளை இறக்கிவிடும் ஏணிப்படி வாகனத்தை நோக்கி ஊர்ந்து சென்றபோது விமான நிலையத்துக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிச் செல்லும் லொறியொன்றின் மீது மோதியது.

மோதிய வேகத்தில் அந்த லொறி நிலை தடுமாறி, கவிழ்ந்து வீழ்ந்தது. விமானத்தின் வலதுப்புற இறக்கையும் சேதமடைந்தது. இந்த விபத்தில் லொறியிலிருந்த இரு பெண்கள் உட்பட எட்டுபேர் காயமடைந்ததாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த சம்பவத்துக்கு பின்னர் விமானத்தில் இருந்து இறங்கிச் சென்ற பயணிகளில் ஒருக்கும் எவ்வித காயமும் இல்லை. நல்லவேளையாக இந்த விபத்தால் அந்த விமானத்தின் பெற்றோல் தாங்கி பகுதிக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை. அப்படி நடந்திருந்தால் அதிலிருந்த 150 பயணிகளின் நிலைமை மிகுந்த விபரீதத்துக்குள்ளாகி இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## உலகச் செய்திகள்

# ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் இருந்து மொசூலின் 4 கிராமங்கள் மீட்பு



ஐ.எஸ்.தீவிரவாதிகளின் பிடியிலிருந்து மேற்கு மொசூல் நகர் அருகே கைரவான் பகுதியில் 4 கிராமங்களை ஈராக் படைகள் மீட்டன.

கிழக்கு மொசூல் நகரை ஐ.எஸ். தீவிரவாதிகளிடமிருந்து ஈராக் படைகள் கடந்த ஜனவரி மாதம் மீட்டு விட்டன. மேற்கு மொசூல் நகரையும் தங்கள் வசப்படுத்துவதற்காக ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் ஈராக் படைகள் பெப்ரவரி மாதம் முதல் போரிட்டுள்ளன.

இந்நிலையில் மேற்கு மொசூல் நகர் அருகே கைரவான் பகுதியில் 4 கிராமங்களை ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியிலிருந்து ஈராக் படைகள் மீட்டு விட்டன. கைரவான் பகுதி டல் அபார் நகரையும், சிரிய எல்லைகளையும் இணைக்கிற பகுதி ஆகும்.

கைரவான் பகுதியில் 4 கிராமங்கள் விடுவிக்கப்பட்டுள்ளதால், ஐ.எஸ். தீவிரவாதிகளின் விநியோக பாதைகள் தடை செய்யப்பட்டு விட்டதாக தகவல்கள் கூறுகின்றன.

இந்த நடவடிக்கையின்போது ஐ.எஸ். தரப்பில் பெருத்த உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் ஏற்பட்டுள்ளதாக அந்த தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

ஈராக் இராணுவ செய்தி தொடர்பாளர் பிரிகேடியர் ஜெனரல் யாஹ்யா ரசூல், மேற்கு மொசூலைப் பொறுத்தமட்டில் 89.5 சதவீத பகுதிகள் ஐ.எஸ்ஸிடமிருந்து மீட்கப்பட்டு விட்டன. சில மாவட்டங்கள் மட்டுமே எதிரிகள் வசம் உள்ளன என தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# வடகொரியாவின் புதிய ஏவுகணை சோதனை வெற்றி

வடகொரியா நடத்திய குறைந்த அளவிலான தூரம் செல்லும் ஏவுகணை சோதனை வெற்றி பெற்றதாக அந்நாட்டு அதிகாரபூர்வ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச அமைப்புகள் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளின் எதிர்ப்புகளையும் மீறி வடகொரியா தொடர்ச்சியாக பல்வேறு கட்ட ஏவுகணை சோதனைகளை மேற்கொண்டு வருகிறது. அமெரிக்கா, ஐ.நா., ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்டவை வடகொரியா மீது பொருளாதார தடைகளை விதிக்கும் முயற்சியில் தொடர்ந்து வருகின்றன.

இந்நிலையில், வடகொரியா அடையாளம் தெரியாத குறைந்தளவின் செல்லும் ஏவுகணையை நேற்றுமுன்தினம் சோதனை செய்ததாக தென் கொரியா தெரிவித்து இருந்தது.

தெற்கு பியாங்கன் மாகாணத்திலுள்ள புக்சங் பகுதியிலிருந்து ஏவப்பட்ட இந்த ஏவுகணை இந்த ஏவுகணை 500 கி.மீ. தூரம் வரை பாய்ந்து, தங்கள் நாட்டின் கிழக்கு பகுதியிலுள்ள கடலில் விழுந்ததாக தென் கொரியா பாதுகாப்பு துறை அதிகாரிகள் கூறினர்.

வடகொரியா நடத்திய குறைந்தளவிலான தூரம் செல்லும் ஏவுகணை சோதனை வெற்றி பெற்றதாக அந்நாட்டு அதிகாரப்பூர்வ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும், சோதனை செய்யப்பட்ட ஏவுகணை இராணுவ பயன்பாட்டுக்கு தயாராக உள்ளது என்று அதில் கூறப்பட்டுள்ளது.

வடகொரியாவின் இந்த ஏவுகணை சோதனை வெற்றி பெற்றதற்கு அந்நாட்டு ஜனாதிபதி கிம் ஜோங் உன் பாராட்டு தெரிவித்துள்ளார்.



# எக்ஸலன்ஸியின் துயரம்

■ பா.மலரம்பிகை

கொழும்பின் வர்த்தக இடங்களில் வெள்ளவத்தையும் ஒன்று. அத்தோடு அதிகளவான தமிழ் பேசக்கூடியவர்கள் வாழக்கூடிய இடமாகவும் வெள்ளவத்தை பிரதேசம் அமைந்துள்ளது. சாதாரண நாளை போன்றே அன்றையதினமான மே 18 ஆம் திகதியும் ஆரம்பமானது. ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளில் ஈடுபடுட்டிருந்த சந்தர்ப்பத்தில் மே 18 வியாழக்கிழமை காலை 10.45 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் பாரியதொரு சிகரம் வீழ்ந்தது போல ஒரு சத்தம். அது வேறெந்த சத்தமும் இல்லை காலி வீதி, வெள்ளவத்தை, சவோய் திரையரங்குக்கு பின்னால் அமைந்துள்ள திருமண மண்டபமும், கேட்போர்கூடமுமான ஐந்து மாடிக்கட்டடமான த எக்ஸலன்சி மண்டபம் இடிந்து வீழ்ந்த சத்தம்.

புயலோ, அதிக மழையோ இல்லாமல் இருந்த அந்த சமச்சீரான காலநிலையில் இவ்வாறு ஐந்து மாடிக்கட்டடம் இடிந்து விழுந்துள்ளமையானது அனைவரையும் சற்றே உற்றுபார்க்க வைத்ததோடு, நான்கைந்து நாட்கள் கடந்தும் நாட்டில் இந்த கட்டடம் வீழ்ந்தமை தொடர்பிலே அதிகளவான பேச்சுக்களாகவே உள்ளன.

அதிக சனநெருக்கடியைக் கொண்ட வெள்ளவத்தை நகரத்தில் இவ்வாறான ஒரு கட்டடம் வீழ்ந்தமையானது நாம் இலங்கையில் தான் இருக்கின்றோமா? அல்லது வெளிநாட்டில் இருக்கின்றோமா என சிந்திக்க வைக்கின்றது. ஏனெனில், பெரும்பாலும் இலங்கை போன்ற நாடுகளில் இவ்வாறு பாரிய கட்டடங்கள் சரிந்து விழுகின்ற சந்தர்ப்பங்கள் அரிது என்றே கூறமுடியும்.

பிரமாண்டமான கட்டடமாக எழுந்திருந்த போது பேசப்படாத த எக்ஸலென்சி மண்டபம் இப்போது, அனைவரும் நன்கு தெரிந்த கட்டடமாகவே மாறிவிட்டது எனலாம். இந்த மண்டபத்தில் திருமண நிகழ்வுகள், வர்த்தக கூட்டங்கள் மற்றும் சமய நிகழ்வுகளும் நடைபெற்று வருவதோடு, 2015 ஆம் ஆண்டு ஷெய்க் சுலைமான் முலாவின் இலங்கையில் உள்ள சுற்றுலா விடுதியாகவே திறுவப்பட்டது.

இடிந்து விழுந்த சந்தர்ப்பத்தில் 3 மாடிக்கட்டடங்கள் நிறுவப்பட்டிருந்து மேலதிகமாக 2 மாடிக்கட்டடம் நிர்மாணப் பணிகள் தொடரும் போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.உணவகம் மற்றும் வாகன தரிப்பிடமும் இக்கட்டடத்தில் உபயோகிக்கப்பட்டு வந்தது.

இந்த மண்டபத்தில் அன்றையதினம் மாலை திருமண வைபவம் ஒன்றும் நடக்கவிருந்த நிலையில், அந்த திருமண வைபவத்துக்கு ஆயத்தங்களை மேற்கொள்ளும் முயற்சிகளில் காலை முதல் அதிலுள்ள தொழிலாளர்கள் தத்தமது வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். இருப்பினும் எதிர்பாராத விதமாக விழுந்த இந்த கட்டடத்தில் பலப்பேர் சிக்கியிருந்தனர். இவர்களை உடனடியாக மீட்கவேண்டும் என உடனடியாக செயற்பட்டு முப்படை வீரர்கள் மற்றும் தீயணைப்பு வீரர்கள் பலவாறான முயற்சிகளை மேற்கொண்டு பல பேருடைய உயிர்களை காப்பாற்றினர்.

அந்தவகையில், இதுவரை 21 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் மற்றும் களுபோவிலை போதனை வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு, அவர்கள் சிலர் சிகிச்சையளிக்கப்பட்டு வீடு திரும்பியும் உள்ளனர்.

ஆனாலும், இந்த இடிந்து விழுந்த கட்டடம் 3 பேருடைய உயிரை பறித்து விட்டது என்பது கவலைக்குரிய விடயமாகும். கொழும்பு என்றவுடன் எந்த தொழிலை செய்தாவது முன்னேறலாம் என்று நினைத்து வரும் மலையகம் உள்ளிட்ட பல பிரதேசங்களை சேர்ந்த இளைஞர்கள் ஏராளம். அதேபோல் தான் பல கனவுகளை மனதில் சுமந்து கொண்டு கொழும்பு வெள்ளவத்தையில் அமைந்துள்ள த எக்ஸலன்சி திருமண மண்டபத்திலும் மலையக இளைஞர்கள் சிலர் துப்புரவு மற்றும் நிர்மாணத் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளார்கள்.


இந்த சந்தர்ப்பத்தில் கொன்கிரீட் தூண்களுக்குள் சிக்கி கொலன்னொடவைச் சேர்ந்த ரத்நாயக்க முதியான்சலாகே சம்பத் உதயகுமார என்பவர் மீட்கப்பட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வேளையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். அவர் மட்டுமே உயிரிழந்திருக்க வாய்ப்பிருக்கும் என எண்ணிய சந்தர்ப்பத்தில், குறித்த கட்டடத்தில் துப்புரவு வேலைகளை செய்து வந்த மொரட்டுவையைச் சேர்ந்த 61 வயதுடைய சண்முகம் அன்னலக்ஷ்மி என்ற பெண்ணும் ஹட்டனைச் சேர்ந்த 20 வயதுடைய ராமன் நிரோசன் என் இளைஞனும் காணாமல் போயுள்ளதாகவும், அவர்களை தேடி கண்டுப்பிடித்து தருமாறு அவர்களின் உறவினர்கள் மற்றும் அங்கு வேலைச் செய்தவர்களும் கேட்டுகொண்டதற்கு இணங்க, தேடுதல் பணி தொடர்ந்து இடம்பெற்றது.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு குறித்த திருமணமண்டபத்தில் துப்புறவு வேலைகளைச் செய்வதற்காக 20 வயதுடைய நிரோசன் கொழும்பிற்கு வந்துள்ளதாகவும், அவரை காணவில்லையென்றும் அவரின் மூத்த சகோதரர் தெரிவித்தமைக்கு இணங்க, பொலிஸாரும், மாநகர சபை தீயணைப்பு படையினரும் தேடுதல் பணியில் ஈடுபட்டனர். அத்தோடு, காணாமல் போனவர்களை உடனடியாக கண்டுப்பிடித்து தரும்படி ராமன் நிரோசனின் உறவினர்கள் கடந்த 20 ஆம் திகதி சனிக்கிழமை வெள்ளவத்தை இடிந்து விழுந்த கட்டடத்திற்கு முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவ்வார்ப்பாட்டத்தின் போது அவரின் தந்தைக்கும் சுகயீனம் ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவரை உயிருடன் மீட்கமுடியும் என்ற நம்பிக்கையில், ஹட்டன் பத்தனை, கிறேக்கிலி தோட்ட மக்கள்

(தொடர்ச்சி 11 ஆம் பக்கம்)



# சியன ஊடக வட்டத்தின் ஊடக செயலமர்வு

























படங்கள்: எம்.எஸ்.எம். ஸாகிர்





சியன ஊடக வட்டம், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்துடன் இணைந்து நடாத்திய ஊடகக் கருத்தரங்கு (20)சனிக்கிழமை கஹட்டோவிட்ட அல் - பத்ரியா மகாவித்தியாலத்தில் நடைபெற்றது.

சியன ஊடக வலையமைப்பின் தலைவரும் முன்னாள் முஸ்லிம் சேவைப் பணிப்பாளருமான எம். இஸட், அஹ்மத் முன்னவர், ஸ்ரீலங்கா மீடியா போரத்தின் தலைவரும் நவமணிப் பத்திரிகை ஆசிரியருமான, என்.எம். அமீன், பயிற்சிக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச கலாசார நிலையத்தின் பணிப்பாளரான நௌபர் மௌலவி, தர்கா நகர் கல்வியல் கல்லூரி முன்னாள் உப -பீடாதிபதி கலைவாதி கலீல், நொலேஜ் பொக்ஸ் பணிப்பாளர் எஸ். ஏ. அஸ்கர் கான், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப்பாளர் ஜுனைத் எம். ஹாரீஸ், மற்றும் எங்கள் தேசம் ஆசிரியர் அஷ்ஷெய்க் ஜெம்ஸித் அஸீஸ், மீள்பார்வை ஆசிரியர் பியாஸ் முஹம்மத், ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போர பயிற்சி குழு இணைப்பாளர் ஹில்மி மொஹம்மட், டெய்லி சிலோன் செய்தி ஆசிரியர் அஷ்செய்க் எம். எம். முஹிதீன் ஆகியோர் கருத்தரங்கில் விரிவுரைகளை நடத்தினர். ஸ்ரீலங்கா மீடியா போர செயற்குழு உறுப்பினர்கள், சியன மீடியா சேர்க்கில் நிர்வாகிகள், மாணவர்கள் பெற்றோர்கள், கல்விமான்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டதைப் படங்களில் காணலாம்.

# முஸ்லிம் தலைமைகள் ஒன்றிணைந்து கிழக்கு மக்களின் அமையம் அங்குரார்ப்பணம்






(இறக்காமம் எஸ்.எல்.நிசார்)

கிழக்கு மக்களின் அமையம் என்னும் அமைப்பின் ஊடாக முஸ்லிம் தலைமைகள் ஒன்றிணைந்து முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு உருவாக்கும் திட்டம் காலத்தின் கட்டாய தேவைப்பாடாகும் என முஸ்லிம் அரசியல் தலைவர்களும் புத்திஜீவிகளும் சட்டத்தரணிகளும் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் நல்லாட்சியில் முஸ்லிம்களுக்கு எதிரான பேரினவாத சக்திகளின் செயல்களினால் முஸ்லிம் மக்களின் காணி அபகரிப்புக்கள், திடீரென தோன்றும் புத்தர் சிலைகள் அத்துமீறிய குடியேற்றம் போன்றவற்றினைக் கருத்தில் கொண்டு கிழக்கு புத்திஜீவிகள் அமையத்தின் தலைமைத்துவக் குழு தவிசாளர் சட்டத்தரணி மர்சூக் மௌலானா இறக்காமம் பிரதேச இணைப்புக்குழுத் தலைவர் பொறியியலாளர் எஸ்.ஐ.மன்சூர் ஆகியோரின் நெறிப்படுத்தலின் நடைபெற்ற இந்நிகழ்வில் இறக்காமம் மாயக்கல்லி விவகார குழு செயலாளர் சட்டத்தரணி பாறுக் சாஹிப் சபையோருக்கு மாயக்கல்லி விடயம் தொடர்பில் தெளிவாக விளக்கினார்.

மாவட்டத்தின் காணி அபகரிப்பு தொடர்பாக பலரும் தங்களது கருத்துக்களை முன்மொழிந்ததுடன் முன்னாள் அமைச்சர்களான பசீர் சேகுதாவுது, ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ், முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் எம்.ரி.ஹஸன் அலி, பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி, கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் எம்.எஸ்.உதுமாலெப்பை, முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான ஏ.எம்.ஜெமில், சட்டத்தரணி துல்கர் நயீம், கனிய வளங்கள் கூட்டுத்தாபன தலைவர் எம்.ஏ.மஜீத் (எஸ்.எஸ்.பி), அட்டாளைச்சேனை தவிசாளர் எம்.எஸ்.ஹன்சில் மக்கள் காங்கிரஸ் செயலாளர் நாயகம் சுபைதீன் ஹாஜியார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மாயக்கல்லி மலை தொடர்பாக முன்னாள் அமைச்சர் அதாவுல்லாஹ் பேசுகையில் மாயக்கல்லி விடயத்திலும் அரசியல் மேற்கொள்ளும் அரசியல்வாதிகளும் புத்திஜீவிகளும் பிரிந்து செயற்படுவதும் வேதனை தருவதாகத் தெரிவித்து ஒலிவாங்கியைப் பிடித்து கண்ணீர் மல்க கதறி அழுததையும் அனைவர் உள்ளங்களையும் நெகிழ வைத்தது. அதனைத் தொடர்ந்து முன்னாள் அமைச்சர் பசீர் சேகுதாவூது எம்.டி.ஹசன் அலி, பிரதி அமைச்சர் அமீர் அலி மாகாண எதிர்க்கட்சித் தலைவர் எம்.எஸ்.உதுமாலெவ்வை ஆகியோரும் உரை நிகழ்தினர்.

## சட்டத்தை மீறினால்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சர் நேற்று முஸ்லிம் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களை அலரி மாளிகையில் சந்தித்து உரையாற்றினார்.

கடந்த சில தினங்களாக முஸ்லிம்களுக்கெதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட அடாவடித்தனங்கள் தொடர்பாக இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளியன்று தபால் சேவைகள் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீமின் ஏற்பாட்டில் நடைபெற்ற முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களது கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி ஜனாதிபதியை சந்திப்பதற்கு விடுத்த வேண்டுகோளையடுத்து ஜனாதிபதி பணிப்பின் பேரில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், ரிசாட் பதியூதின், பைசர் முஸ்தபா, ஏ.எச்.எம். பௌசி எம்.எச்.ஏ. ஹலீம் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.எம். மரிக்கார் முஜிபுர் ரஹ்மான் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத்சாலி ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்டுவது தொடர்பாக பல முக்கிய தீர்மானங்கள் இக்கூட்டத்தில் எடுக்கப்பட்டதாக தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்தார்.

## ஜனாதிபதி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தலைவர் ஒருவர் அவுஸ்திரேலியாவிற்கு விஜயம் செய்யும் இரண்டாவது சந்தர்ப்பம் இதுவெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் 1954ஆம் ஆண்டில் பிரதமராக பதவி வகித்த சேர் ஜோன் கொத்தலாவல அவுஸ்திரேலியாவிற்கு விஜயம் செய்திருந்தார். இந்நிலையில், 63 ஆண்டுகளின் பின்னர் இலங்கை அரச தலைவர் ஒருவர் ஆஸ்திரேலியாவிற்கு விஜயம் செய்யும் இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

எதிர்வரும் 26ஆம் திகதி வரையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவுஸ்திரேலியாவில் தங்கியிருப்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## எக்ஸலன்ஸியின்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி...)

போராட்டம் முன்னெடுத்ததோடு, இளைஞன் உயிருடன் திரும்பி வர வேண்டும் என நினைத்து தோட்டத்திலுள்ள காளியம்மன் கோவிலில் விசேட பூஜைகளும் இடம்பெற்றன.

ஆனால், கடந்த 20 ஆம் திகதி சனிக்கிழமையன்று குறித்த இளைஞனின் உடலம், கட்டடங்களுக்கிடையில் சிக்கி நசுங்குண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இதே நேரம், காணாமல் போன 60 வயதுடைய பெண்ணின் சடலமும் 21 ஆம் திகதி மாலை கண்டுபிடிக்கப்பட்டது.

இதுவரையில் மூன்று உயிர்களை பறித்த இந்த கட்டடம் எதனால் இடிந்து வீழ்ந்திருக்கும் என எண்ணிக்கொண்டிருக்கும் சமயத்தில் உரிய தரச்சான்றிதழ் இல்லாத ஒரு இடத்தில் ஐந்து மாடிக்கட்டடம் கட்டப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.

அதுவும், கால்வாயின் பின்புறத்தில் இவ்வாறான கட்டடம் எவ்வாறு கட்டமுடியும் என்றும் பல அரசியல் தரப்புக்களில் கேள்விகள் எழுந்துள்ளன. அந்த சமயத்தில் மாநகரம் மற்றும் மேல் மாகாண சபை அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க குறித்த இடத்திற்கு சென்று, இந்த இடத்தில் உரிய தரச்சான்றிதழ் இல்லாமல் கட்டப்பட்டுள்ளதாகவும், இந்த மண்டபத்தின் உரிமையாளரை உடனடியாக கைதுசெய்யுமாறும் தெரிவித்திருந்தார். இதேநேரம், சம்பவம் இடம்பெற்ற அன்றையதினம் அமைச்சர் மனோகணேசனும், தரச்சான்றிதழ் இல்லாமல் கட்டப்பட்டுள்ளது என்ற கருத்தினை வெளியிட்டிருந்தார்.

எனினும், இதன் உரிமையாளர்கள் தாம் உரிய அனுமதிப்பத்திரங்களை பெற்றே நிர்மாணவேலைகளைச் செய்ததாகவும் தெரிவிக்கின்றார்கள்.

பல எதிர்ப்புக்கள் பல பக்கம் வரும் நிலையில் கடந்த 20 ஆம் திகதி வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த த எக்ஸலென்சி உரிமையாளரான வெள்ளவத்தையை சேர்ந்த 62 வயதுடைய சாஜஹான் பதா, 21 ஆம் திகதியன்று நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது அடுத்த 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இவ்வாறு எத்தனை பேர் கைது செய்யப்பட்டாலும், விளக்கமறியலில் வைக்கப்பட்டு கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டாலும், மறிக்கப்பட்ட மூன்று உயிர்களும் வரப்போவதில்லை. ஊழல்கள் கொண்ட நாட்டில், பணத்திற்காக எவ்வாறான தரச்சான்றிதழ்களையும் விற்கும் நபர்களுக்கு இந்த சந்தர்ப்பம் ஒரு பாடமாகவே அமைந்துள்ளது.

இனிவரும் காலங்களிலும் கட்டடங்களுக்கு மட்டுமன்றி பிற எந்த தொழிலிலும் ஊழல்கள் நடைபெறாமல் இருந்தாலே இவ்வாறான பெரும் சேதங்களை நிறுத்திவிடலாம்.

இங்கு பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்கள் சிலவற்றுக்கும் உரியதரத்தில் இல்லை என்றும் கூறப்படுகின்றது. நாட்டுக்குள் தருவிக்கப்படும் பொருட்கள் தரமானவையா என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது. சந்தையில் வாங்கும் பொருட்களது தரம்பற்றி பரிசீலிப்பது யார் என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது.

அடிக்கடி திருமணம், அரசியல் தலைவர்கள் கலந்துகொள்ளும் மகாநாடுகள் நடைபெறும் எக்ஸலன்சியில் இரவு நேரம் ஒன்றில் இந்த விபத்து ஏற்பட்டிருந்தால் அழிவுகள் பன்மடங்காக இருந்திருக்கும்.

## புதிய...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

செய்து கொண்ட அமைச்சர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

புதிய அமைச்சரவை மாற்றத்தின் கீழ் 9 புதிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களும் இராஜாங்க அமைச்சர் ஒருவரும் நேற்று காலை ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார். அத்தோடு நட்புறவு, அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு நாட்டின் அபிவிருத்திக்கான கூட்டுப்பொறுப்பை நிறைவேற்ற ஒன்றிணையுமாறும் கேட்டுக்கொண்ட ஜனாதிபதி, மக்களை சிறந்தவர்களாக மாற்றுவதன் மூலமே ஒழுக்கமான சமூகத்தையும் நாட்டையும் கட்டியெழுப்ப முடியும் என்றும் குறிப்பிட்டார்.

நல்லாட்சி அரசில் முதன்முறையாக இடம்பெற்ற இந்த அமைச்சரவை மாற்றம் தொடர்பிலான இந்நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள, பிரதியமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.அபேகோன் ஆகியோரும் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமைச்சரவை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

நல்லாட்சி அரசின் அமைச்சரவை மாற்றம் நேற்று இடம்பெற்றது. வெசாக் தினத்துக்கு முன்னர் நடைபெறவிருந்து பின்னர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வருகையை அடுத்து பிற்போடப்பட்ட இந்த மாற்றத்தில் 9 புதிய அமைச்சர்களும் ஒரு இராஜாங்க அமைச்சரும் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துக் கொண்டனர்.

நாட்டின் ஒட்டுமொத்த பார்வையையும் தன்னகத்தே இழுத்துள்ள இந்த மாற்றம் குறித்து நவமணி வினவியபோதே கெஹலிய எம்.பி., மேற்கண்டவாறு கூறினார்.

அதாவது, அமைச்சரவை மாற்றம் குறித்து பெரிதாக கூறுவதற்கு ஒன்றுமில்லை. அமைச்சுக்கள் மாறி மாறி தான் வழங்கப்பட்டுள்ளதே ஒழிய இதனை பூரணமான மாற்றம் என்று எம்மால் ஏற்றுக் கொள்ளமுடியாது. இந்த மாற்றத்தால் நாட்டின் அபிவிருத்திக்கோ அல்லது ஏனைய முன்னேற்றங்களுக்கோ எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை.

மக்களும் இந்த மாற்றத்தை எதிர்பார்க்கவில்லை. மாறாக இந்த அரசே மாற வேண்டும் என்பது தான் அவர்களின் நோக்கமாகும். எனவே, தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்றார்.

## பள்ளிவாசல்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் வெளியிட்டுள்ள

பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

''இது போன்ற தாக்குதல்கள் அனைத்து சமூகங்களும் கண்டனம் செய்ய வேண்டும். மத வெறுப்புகளைத் தூண்டிவிடுபவர்கள் இதனை பொறுப்பேற்றுக் கொள்வார் என நம்புகிறேன்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டிலுள்ள பள்ளிவாசல்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களுக்கு நேற்று அமெரிக்கா கண்டனம் வெளியிட்டுள்ள நிலையில் நேற்று பிரித்தானியாவும் கண்டனம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அம்பாறை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இறக்காமம் பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட முஸ்லிம் நபர் ஒருவருக்குச் சொந்தமான உணவகம் ஒன்றே இவ்வாறு தீக்கிரையாகியுள்ளது.

அம்பாறை கச்சேரிக்கு வருகை தரும் அனைத்து இன மக்களும் விரும்பிச் செல்லக்கூடிய உணவகம் ஒன்றாக இந்தச் சிறிய உணவகம் காணப்பட்டுள்ளது.

இது ஒரு இனவாத செயற்பாடென்று பிரதேசவாசிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த சில வாரங்களாக முஸ்லிம் வர்த்தக நிலையங்களை இலக்கு வைத்து சில திட்டமிட்ட தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுவருவது தொடர்பில் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மஹரகம...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அக்குறணை பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான கார்ப்பட் மற்றும் லெதர் விற்பனை நிலையமே இவ்வாறு தீக்கிரையாகியுள்ளது.

பிரபல சுப்பர் மார்க்கட் இரண்டு குறித்த வர்த்தக நிலையத்தை அண்மித்துள்ளதால், அதில் உள்ள சீ.சீ.டீ.வி வீடியோ காட்சிகள் பரிசோதனை செய்யப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று உரிமையாளரின் சகோதரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதேவேளைக் குறித்த வர்த்தகருக்குச் சொந்தமான மேலும் இரண்டு வர்த்தக நிலையங்களும் மஹரகம பிரதேசத்தில் காணப்படுகின்றது.

குறித்த தீ விபத்தில் வர்த்தக நிலையம் முற்றாக சேதமடைந்துள்ளதாகவும், சுமார் இரண்டு கோடியளவில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் வர்த்தக நிலைய உரிமையாளரின் சகோதரர் தெரிவித்துள்ளார். கடந்த 13 வருடங்களாக குறித்த வர்த்தக நிலையம் இந்த இடத்தில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை நேற்று இரவு வர்த்தக நிலையம் மூடப்படும் போது, அங்கிருந்த பிரதான மின்சார கட்டமைப்பு ஓப் செய்யப்பட்டதாக வர்த்தக நிலைய ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

## அமைச்சுக்களில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இராஜாங்க அமைச்சரும் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்று வந்த சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில் அமையப் பெற்றிருந்த இந்த செயற்பாட்டில், சில அமைச்சர்களின் பதவிகள் பறிக்கப்பட்டு அவர்களுக்கு வேறு அமைச்சுக்கள் வழங்கப்பட்டுள்ளதோடு, சிலரின் அமைச்சுக்கள் கைமாற்றப்பட்டுள்ளதாகவே தெரியவந்துள்ளது.

அந்தவகையில் நாட்டை பல கட்டங்களின்போது சர்வதேச அழுத்தங்களிலிருந்து காப்பாற்றிய, கடந்த இரண்டு வருடக் காலத்துக்குள் ஜெனிவா சிக்கலிலிருந்து நாட்டை விடுவிக்க பெரும் பங்காற்றிய வெளிவிவகார அமைச்சரான மங்கள சமரவீரவுக்கு தற்போது நிதியமைச்சும் கயந்த கருணாதிலக வசமிருந்த ஊடகத்துறை அமைச்சும் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் சிறந்த நிதியமைச்சராக தெரிவு செய்யப்பட்ட ரவி கருணாநாயக்கவுக்கு, கடந்த காலங்களில் அவருக்கு எதிராக எழுந்த சகல எதிர்ப்புக்களையும் முடிவுக்கு கொண்டுவரும் வகையில் வெளிவிவகார அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், நல்லாட்சி அரசின் சர்ச்சைக்குரிய அமைச்சாக பார்க்கப்பட்ட அர்ஜுன ரணதுங்கவின் துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சுப் பொறுப்புக்கள் அவரிடமிருந்து எடுக்கப்பட்டு மஹிந்த சமரசிங்கவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, சமூக வலுவூட்டல், நலன்பேணல் மற்றும் கண்டிய மரபுரிமைகள் அமைச்சராக எஸ்.பி. திஸாநாயக்கவும், தொழில், தொழில் உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சராக டபிள்யு.டீ. ஜே.செனவிரத்னவும்;, காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சராக கயந்த கருணாதிலகவும் நேற்றைய தினம் பதவிப்பிரமாணம் செய்துக் கொண்டனர்.

இவர்களோடு, அர்ஜுன ரணதுங்கவுக்கு பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சும், இதுவரை பெற்றோலிய வளங்கள் அமைச்சராக இருந்த சந்திம வீரக்கொடிக்கு திறன் அபிவிருத்தி. தொழிற் பயிற்சி அமைச்சும், எவன் காட் சர்ச்சையை அடுத்து தனது சட்டம், ஒழுங்கு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சுப் பதவியை 2015 நவம்பர் 9 ஆம் திகதி இராஜினாமா செய்து கொண்ட திலக் மாரப்பனவுக்கு அபிவிருத்தி பணிகள் அமைச்சும் ஜனாதிபதியால் வழங்கப்பட்டது.

மேற்படி 9 அமைச்சர்களுடன், மீன்பிடித்துறை அமைச்சுடன் சேர்த்து அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கு தற்போது புதிதாக மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## வாசு தேவ...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.

எதுஎவ்வாறு இருப்பினும், வாசுதேவவின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என, வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

## ரிவிரவுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சீல் வைக்கப்பட்டது.

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒன்றால் விதிக்கப்பட்டிருந்த பணத்தை செலுத்த தவறியதாலேயே குறித்த நிறுவனத்தின் கட்டடத்துக்கு சீல் வைக்கப்பட்டது.

எனினும், குறித்த பத்திரிகை நிறுவனம் மீது சீல் வைக்கப்படவில்லை என்றும், மாறாக குறித்த நிறுவனம் இயங்கிவந்த அலுவலகக் கட்டிடம் மீதே சீல் வைப்பு இடம்பெற்றிருப்பதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். எவ்வாறாயினும் நீதிமன்ற உத்தரவின்படி ரிவிர பத்திரிகையின் அலுவலகத்திலுள்ள பொருட்கள் இடமாற்றம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ரவி, மங்கள...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கருணாநாயக்கவும் எதிர்வரும் வியாழக்கிழமை பதவியேற்றகவுள்ளனர்.

நிதி அமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்க நேற்று நிதி அமைச்சுக்குச் சென்று பிரியாவிடை பெற்றுச் சென்றார்.

இதேநேரம் வெளிவிவகார அமைச்சருடன் நிதி அமைச்சரும் இரு அமைச்சுகளுக்கும் சென்று கூட்டாகப் பதவியேற்கவுள்ளனர்.

## இன விரோத...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தொடர்ந்து மாலை நடைபெறவுள்ள இந்த விவாதத்தில் தமிழ், முஸ்லிம் எம்.பிக்கள் உள்ளிட்ட பல முக்கிய உறுப்பினர்களும் கருத்து வெளியிடவுள்ளனர்.

மஹிந்த அரசில் மட்டுமன்றி நல்லாட்சி அரசிலும் முஸ்லிம்களுக்கு எதிராக கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக கட்டவிழ்த்துவிடப்படும் அட்டூழியங்கள் பற்றி எதிராகவே இதன்போது பிரதானமாக விவாதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

Sports

விளையாட்டுச் செய்திகள்



# சங்காவின் புதிய மைல்கல்

இங்கிலாந்தின் முதந்தர கழகங்களுக்கிடையில் நடைபெற்றுவரும் கவுண்டி கிரிக்கெட் போட்டித் தொடரின் மிட்ல்செக்ஸ் அணியுடனான 4 நாள் ஆட்டம் நடைபெற்று வருகின்றது. லண்டனின் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்றுவரும் இப் போட்டியில் இலங்கை அணியின் முன்னாள் தலைவரும், நட்சத்திர வீருமான குமார் சங்கக்கார, 2 இன்னிங்ஸ்களிலும் தொடர்ச்சியாக 2 சதங்களைக் குவித்து, முதந்தரக் கிரிக்கெட்டில் 20 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த முதலாவது இலங்கை வீரராக வரலாற்றில் இடம்பிடித்தார்.

இந்த போட்டியில் முதல் இன்னிங்ஸில் அபாரமாக துடுப்பெடுத்தாடிய சங்கக்கார, 114 ஓட்டங்களையும், 2ஆவது இன்னிங்ஸில் ஆட்டமிழக்காது 116 ஓட்டங்களையும் பெற்று அவ்வணியை தோல்வியிலிருந்து மீட்டார்.

இதன்படி, சர்ரே அணிக்காக தொடர்ந்து 4ஆவது நான்கு நாள் போட்டியில் கலந்துகொண்ட சங்கா, இதுவரை 4 சதங்களைக் குவித்து 588 ஓட்டங்களைப் பெற்று இங்கிலாந்தின் கவுண்டி போட்டியில் அதிக ஓட்டங்களைக் குவித்த 2ஆவது வீரராகவும் சங்கக்கார மாறினார்.

அத்துடன், முதந்தர ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அந்த மைல்கல்லை எட்டிய உலகின் 4ஆவது வீரராகவும் மாறினார். மேலும் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியில் அபாரமாக விளையாடி முதந்தர போட்டிகளில் 54ஆவது சதத்தையும் பூர்த்தி செய்தார்.

இலங்கை அணியின் முன்னாள் வீரர் குமார் சங்கக்கார 2015ஆம் ஆண்டு உலகக்கிண்ண போட்டிகளின் பிறகு சர்ரே அணிக்காக விளையாடிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அணியை வீழ்த்தி ஸ்கொட்லாந்து வரலாற்று வெற்றி

இலங்கை அணியுடனான உத்தியோகபூர்வமற்ற ஒருநாள் போட்டியில் 7 விக்கெட்டுக்களினால் அபார வெற்றி பெற்ற டெஸ்ட் அந்தஸ்து இல்லாத ஸ்கொட்லாந்து அணி, தமது கிரிக்கெட் வரலாற்றில் சிறப்புமிக்க வெற்றியைப் பதிவு செய்தது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதல் போட்டியின் நாணயச்சுழற்சியின் வெற்றி பெற்ற இலங்கை அணித் தலைவர் மெத்யூஸ் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதன்படி முதலில் களமிறங்கிய இலங்கை அணி 49.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 287 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பில் தினேஷ் சந்திமால் 79 ஓட்டங்களையும், சாமர கபுகெதர 71 ஓட்டங்களையும், குசல் ஜனித் பெரேரா 57 ஓட்டங்களையும் அதிகபட்ச ஓட்டங்களாகப் பெற்றுக்கொடுத்தனர்.

ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். குறிப்பாக, நீண்ட நாட்களின் பின்னர் அணிக்கு திரும்பியிருந்த அணித் தலைவர் மெத்யூஸ் 15 ஓட்டங்களைப் பெற்ற வேளையில், பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

ஸ்கொட்லாந்து சார்பாக பந்து வீச்சில் எவன்ஸ் மற்றும் விதின்காம் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர். அதன் பின்னர் 288 என்ற வெற்றி இலக்கினை நோக்கித் துடுப்பெடுத்தாட களம் இறங்கிய ஸ்கொட்லாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களின் இணைப்பை உடைப்பதற்கு இலங்கை பந்துவீச்சாளர் பெரிதும் சிரமப்பட்டனர்.இதன் காரணமாக அவ்வணி 42.5 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமே இழந்து 291 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்று இலங்கை அணிக்கு அதிர்ச்சியளித்தது.

துடுப்பாட்டத்தில் ஸ்கொட்லாந்து அணி சார்பில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கைல் கோட்சர் அதிரடியாக ஆடி 118 ஓட்டங்களை விளாசினார். மற்றைய ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான மெத்திவ் குரோஸ் ஆட்டமிழக்காமல் 106 ஓட்டங்களை பெற்று இறுதி வரை களத்தில் இருந்தார்.

2ஆவது ஒருநாள் போட்டி நாளை நடைபெறவுள்ளது.



# தாய்லாந்து மெய்வல்லுனரில் 3 புதுமுக வீரர்களுக்கு வாய்ப்பு

## யாழ். மண்ணின் அனிதாவும் பங்கேற்பு





பீ.எப்.எம் நிஷாட்

எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள தாய்லாந்து திறந்த மெய்வல்லுனர் போட்டித் தொடரில் பங்கேற்கவுள்ள இலங்கை அணியில் 3 புதுமுக வீரர்களுக்கு சர்வதேச போட்டிகளில் முதற்தடவையாக பங்கேற்கும் வாய்ப்பை இலங்கை மெய்வல்லுனர் சம்மேளனம் வழங்கியுள்ளது.

இதன்படி, கடந்த சில வருடங்களாக தேசிய அரங்கில் கோலூன்றிப் பாய்தலில் சாதனைக்கு மேல் சாதனைகளை படைத்து வருகின்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும், தெல்லிப்பழை மகஜனாக் கல்லூரியின் பழைய மாணவியுமான அனிதா ஜெகதீஸ்வரனும் இப்போட்டித் தொடரில் முதற்தடவையாக இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தவுள்ளார்.அத்துடன், சர்வதேசப் போட்டியொன்றில் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் இலங்கை சார்பாக போட்டியிடும் முதலாவது வீராங்கனையாகவும் அவர் வரலாற்றில் இடம்பெறவுள்ளார்.

இந்நிலையில்,பெண்களுக்கான சம்மட்டி எறிதலில் தேசிய சாதனையை 4 முறை முறியடித்த அயேசா மதுவந்தி, சுமார் 4 வருடங்களுக்குப் பிறகு சர்வதேசப் போட்டியொன்றில் இலங்கை அணியை முதற்தடவையாக பிரதிநிதித்துவப்படுத்தவுள்ளார்.அத்துடன், இலங்கை மெய்வல்லுனர் துறை வரலாற்றில் சுமார் 7 வருடங்களுக்குப் பிறகு மூவகைப் போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பை அஜித் கருணாதிலக பெற்றுக்கொண்டுள்ளார். இவர் கடந்த வருடம் நடைபெற்ற தேசிய விளையாட்டு விழாவில் புதிய தேசிய சாதனை நிகழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், ஆண்களுக்கான 400 மீற்றரில் காலிங்க குமார, நீளம் பாய்தலில் தனுக லியனபதிர, ஈட்டி எறிதலில் சுமேத ரணசிங்க, பெண்களுக்கான முப்பாய்ச்சலில் விதூஷா லக்ஷானி மற்றும் 3000 மீற்றர் தடைதாண்டலில் நிலானி ரத்னாயக்கவும் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தாய்லாந்து திறந்த மெய்வல்லுனர் போட்டிகள் எதிர்வரும் ஜூன் மாதம் 12ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதுடன், இதில் இலங்கை அணியின் சி. கபாஸ்கரன் செயற்படவுள்ளதுடன், முகாமையாளராக மாதவ பண்டார சென்ரத் பணியாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



அட்டாளைச்சேனை பிரதேச செயலக விளையாட்டுப் போட்டியின் இறுதி மெய்வல்லுனர் நிகழ்வும் , பரிசளிப்பு வைபவமும் நேற்றுமுன்தினம் (21) மாலை அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் ரீ.ஜே. அதிசயராஜ் தலைமையில் இடம்பெற்றது.கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம்.நஸீர் இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், அதிதிகளாக முதலமைச்சரின் செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ், அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெமீல், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஐ.எம்.பாயிஸ் உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். இவ்விளையாட்டுப் போட்டியில் தேசிய மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் சாதனை படைத்த பல வீரர்கள் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிக்காட்டியதுடன், 5000,4★400 மீற்றர் போன்ற ஓட்டப் போட்டிகளும் அதிதிகள் முன்னிலையில் இடம்பெற்றதுடன், இறுதிப்போட்டியில் அட்டாளைச்சேனை சோபர் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தினை பெற்றுக்கொண்டது.(பைஷல் இஸ்மாயில்)



கண்டி சிட்டி ஜம்மிய்யதுல் உலமா சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் ஜே.எச்.எம்.பாயிஸ் தலைமையில் கண்டி பொலிஸ் மைதானத்தில் (20) இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முஸ்லிம் சமய கலாசாரம் மற்றும் தபால் துறை அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம் கலந்து கொண்டு சிறப்பித்தார்.அத்துடன் மத்திய மாகாண சபை உறுப்பினர் எம். டி முத்தலிப், கண்டி நகர் பள்ளிவாசல்களின் சம்மேளனத்தின் தலைவர் அல்ஹாஜ் கே. ஆர். கே சித்தீக்,எம் எச்.ஏ. பாயிஸ் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.ஆறு விளையாட்டுக் கழங்கள் பங்கு கொண்ட இந்த போட்டியில் இறுதிச் சுற்றுக்காக நுஜூம் விளையாட்டுக் கழகமும், கமர் விளையாட்டுக் கழகமும் பங்கு கொண்டன. இதில் கமர் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.தில் சிறந்த ஆட்ட நாயகனாக ஸக்கி தெரிவு செய்யப்பட்டார்.
(இக்பால் அலி)

# லா லிகா கால்பந்து ரியல் மெட்ரிட் சம்பியன்

லா லிகா கால்பந்து தொடரில் ரியல் மெட்ரிட் அணி 33ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றது. இப் பருவகாலத்தின் கடைசி போட்டியில் நட்சத்திர வீரர் ரொனால்டோ, கரீம் பென்சிமா ஒரு கோல் அடித்து கைகொடுக்க 2-0 என மலாகா அணியை வீழ்த்தியது.

ஸ்பெய்னில், உள்ளூர் கால்பந்து அணிகள் பங்கேற்ற லா லிகா தொடர் நடைபெற்றது. இதில் மலாகாவில் நடைபெற்ற கடைசி சுற்று லீக் போட்டியில்,ரியல் மெட்ரிட், மலாகா அணிகள் மோதின.

போட்டியின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய ரியல் மெட்ரிட் அணிக்கு கிறிஸ்டியானோ ரொனால்டோ (2ஆவது நிமிடம்), பென்சிமா (55ஆவது) தலா ஒரு கோல் அடித்து கொடுத்தனர். சொந்த மண்ணில் மலாகா அணியினரால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. ஆட்டநேர முடிவில் ரியல் மெட்ரிட் அணி 2-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

பார்சிலோனா நகரில் நடைபெற்ற மற்றொரு போட்டியில் பார்சிலோனா, எய்பார் அணிகள் மோதின. மெஸ்சி 2 (75, 90ஆவது நிமிடம்),



லூயிஸ் சாரஸ் (73வது) ஒரு கோல் அடித்து கைகொடுக்க, பார்சிலோனா அணி 4-2 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. இதன்படி, லீக் சுற்றின் முடிவில், 38 போட்டியில் 29 வெற்றி, 6 டிரா, 3 தோல்வி என 93 புள்ளிகள் பெற்ற ரியல் மெட்ரிட் அணி, புள்ளிப்பட்டியலின் முதலிடம் பிடித்து 33ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை வென்றது.

அத்துடன், அதிக முறை சம்பியன் பட்டம் வென்ற அணிகளுக்கான பட்டியலில் அவ்வணி தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது. எனவே, முதல் மூன்று இடங்களை பிடித்த ரியல் மெட்ரிட் , பார்சிலோனா, அத்லெடிகோ மெட்ரிட் அணிகள், சம்பியன்ஸ் லீக் (2017-18 சீசன்) தொடருக்கு நேரடியாக தகுதி பெற்றன.

# உலக இளையோர் மெய்வல்லுனரில் பங்கேற்க சாலிதவுக்கு வரம்



பீ.எப்.எம் நிஷாட்

தாய்லாந்தின் பெங்கொக் தேசிய அரங்கில் நடைபெற்று வருகின்ற இரண்டாவது ஆசிய இளையோர் மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டிகளின் 3ஆவது நாளான நேற்று இலங்கை அணியின் வீரர் சாலித சந்தூஷ், ஆண்களுக்காக 200 மீற்றர் முதல் சுற்று ஓட்டப்பந்தயத்தின் 3ஆவது இடத்தைப் பெற்று எதிர்வரும் ஜூலை மாதம் கென்யாவில் நடைபெறவுள்ள இளையோர் உலக மெய்வல்லுனர் போட்டிகளில் பங்குபற்றும் வாய்ப்பை பெற்றார். அவர் குறித்த போட்டித் தூரத்தை 22.00 செக்கன்களில் ஓடி முடித்து, தனது சிறந்த காலப்பதிவையும் மேற்கொண்டு, அரையிறுதிப் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பையும் பெற்றுக்கொண்டார்.

எனினும், நேற்று மாலை நடைபெற்ற அரையிறுதிப் போட்டியின் குறித்த போட்டியை 21.96 செக்கன்களில் ஓடிமுடித்த சாலித, இன்று நடைபெறவுள்ள இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றார்.

இந்நிலையில், கடந்த மாதம் தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் நடைபெற்ற 55ஆவது தேசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகளில் திறமைகளை வெளிப்படுத்திய 3 வீரர்கள் இளையோர் உலக மெய்வல்லுனர் தொடரில் பங்கேற்க தகுதிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் கொட்டாஞ்சேனை பெனெடிக் கல்லூரியைச் சேர்ந்த ரவிஸ்க இந்திரஜித் மற்றும் காலி மஹிந்த கல்லூரியின் நவோத்ய சங்கல்ப (ஆண்களுக்கான 400 மீற்றர்), பெண்களுக்கான 2,000 மீற்றர் தடைதாண்டல் ஓட்டப் போட்டியில் குளியாப்பிட்டி மத்திய கல்லூரியின் அஸ்மிகா ஹேரத் ஆகியோர் எதிர்வரும், ஜூலை மாதம் கென்யாவில் நடைபெறவுள்ள இளையோர் உலக மெய்வல்லுனர் போட்டித் தொடரில் பங்கேற்கவும் தகுதிபெற்றமை குறிப்பிடத்தக்கது.எனவே, உலக இளையோர் மெய்வல்லுனரில் இலங்கை சார்பாக 4 வீரர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

# உமர் அக்மல் அதிரடி நீக்கம்



பாகிஸ்தான் அணியின் நட்சத்திர வீரர் உமர் அக்மல், எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள சம்பியன் கிண்ண கிரிக்கெட் தொடரிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2 மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட 2ஆவது உடற்தகுதி பரிசோதனையில் அக்மல் தோல்வியடைந்த காரணத்தால், இவ்வாறு அக்மலை சம்பியன் கிண்ணத் தொடரிலிருந்து நீக்குவதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

முன்னதாக கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற அவுஸ்திரேலிய அணியுடனான போட்டித் தொடரில் பிரகாசிக்கத் தவறிய காரணத்தால் அக்மல் அதிரடியாக நீக்கப்பட்டார். ஆனால், அண்மையில் நிறைவடைந்த மேற்கிந்திய தீவுகளுடனான போட்டித் தொடரிலும் உடற்தகுதி பரிசோதனையில் உமர் அக்மல் தோல்வியடைந்த காரணத்தால் அணியில் இடம்பெறவில்லை.

அத்துடன், பாகிஸ்தானில் நடைபெற்ற உள்ளூர் போட்டியில் ஒழுங்கீனமாக நடந்து கொண்ட உமர் அக்மல் மற்றும் ஜூனைத் கான் ஆகியோருக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை 50 சதவீத அபராதம் விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், உமர் அக்மலுக்குப் பதிலாக, 27 வயதான உமர் அமின் அல்லது 28 வயதாக ஹாரிஸ் சொஹைலுக்கு வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

# ஹம்பாந்தோட்டையில் மீண்டும் கிரிக்கெட்

எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ள இலங்கை மற்றும் சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரின் 3 போட்டிகளை ஹம்பாந்தோட்டை சூரியவெவ மைதானத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் பிறகு இந்த மைதானத்தில் எந்தவொரு சர்வதேசப் போட்டிகளும் நடைபெறவில்லை.எனினும், 2015ஆம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் ஓரேயொரு ஒருநாள் போட்டி இம்மைதானத்தில் இறுதியாக நடைபெற்றது. இதுவரை 17 ஒருநாள் மற்றும் 7 டி20 போட்டிகள் இம்மைதானத்தில் நடைபெற்றுள்ளது. இந்நிலையில், சிம்பாப்வே போட்டித் தொடர் எதிர்வரும் ஜூலை 27ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதுடன்,இதில் ஜூலை 6, 8 மற்றும் 10ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள ஒருநாள் போட்டிகள் சூரியவெவ மைதானத்தில் நடைபெறவுள்ளன.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 23rd MAY 2017